8 - 5 - 22

A

TAMIL POETICAL ANTHOLOGY,

WITH GRAMMATICAL NOTES AND A VOCABULARY.

தமிழ்ச்செய்யுட் கலம்பகம்.

இஃது

மகா. ரா. ரா. துரைத்தனத்தாராலே ஆதரிக்கப்பட்ட
பள்ளிக்கூடங்களில் படிக்கிறவர்கள் எளிதில் தமிழ் இலக்கியத்தைக்
கற்றறியும் பொருட்டாக

ஜீ. யூ. போப்பையராற்

செய்யப்பட்டது.

"பல சொல்லக் காமுறுவர், மன்ற, மாசற்ற
சில சொல்ல றேற்றாதவர்."

இரண்டாம்பதித்தல்.

MADRAS:
PRINTED AND PUBLISHED BY P. R. HUNT.
Sold at the American Mission Press.
1859.
Price 4 Rupees.

NOTICE.

[SECOND EDITION.]

It has not been thought necessary to adopt any particular arrangement in the following verses.

All are from really good authors.

The references are adapted to either the II^{D} or III^{D} Grammars.

The vocabulary at the end contains every word in the verses, except a few very common ones.

By comparing this vocabulary with that appended to the III^{D} Grammar, much information may be gained, in many cases.

The author is strongly opposed to the ordinary method of studying Tamil poetry, with the aid of verbal commentaries; and this compilation is an attempt to introduce a better system.

To those who have studied the Tamil Hand-Book, this work is recommended as a fitting introduction to the higher dialect of Tamil.

Nothing like the moral verses of the Tamil poets are to be found in the cognate languages of South India. They are the result of Budhistic influences. The authors of most of them were Jains.

In regard to Tiruvaḷḷuvar when it is remembered that, according to credible tradition, he lived in St. Thomé, about the time when the first Armenian merchants settled there; that he was unfettered by caste; and that his chief friend was Êlêla-singan, a sea-captain, it will not seem improbable that he was indebted to intercourse with the strangers for the ideas of many of his verses.

G. U. POPE.

Ootacamund, 1859.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி.

செய்யுள் அகராதி முற்றும்.

POPE'S

TAMIL POETICAL ANTHOLOGY.

தமிழ்ச் செய்யுட் கலம்பகம்.

[கெடுதல் விகாரம் வந்த சொல்லுக்கு எல்லாம் (,) இம் முனைக்குறிப்பு மேலே இருப்பதுகாண்க.—ஒவ்வொரு பாட்டின் அடியிலே துரைத்தனத்தார் ஸ்தாபித்த கல்விச்சாலைகளில் வழங்கிவருகிற தமிழ் இலக்கண வினாவிடையை மாணாக்கர் ஒத்துப் பார்க்கிறதற்கு உதவியாக அந்தந்தக் காரியங்களைப் பற்றின குறிப்புகள் சேர்க்கப்பட்டன.]

I. பாடம்.

ADORATION OF GOD.

கடவுள் வணக்கம்.

[கடவுளின் உண்மை.]

God the first in all worlds, as A in all alphabets.

1. அகர’ முதல எழுத்’தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

[எழுவாய்: எழுத்தெல்லாம், உலகு. (இ. வி. 128.) பயனிலை: முதல, முதற்று. (வி. 129.) ஏ எ-து தேற்றேகாரம். (வி. 111.) முதல, முதற்று என்பன குறிப்பு வினைகள். (வி. 93.) இது குறள் வெண்பா. (வி. 187.)]

[அறிவின் பயன்.]

Learning of no value to the indevout.

2. கற்றதனால் ஆய பயன் என் கொல், வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

[எழு: பயன். பயனி: என்? கற்றதனால் எ—து பகுபதம். கல் எ—து பகுதி. ற் எ—து இடை நிலை. து எ—து விகுதி. அன் எ—து சாரியை. ஆல் எ—து வேற்றுமையின்உருபு. (வி. 95. 123.) ஆய = ஆகிய, உண்டாகிய: இடைக்குறை. (வி. 41. 87.) எனின். (வி. 86.) கொல் எ—து அசைநிலை. (வி. 116.) அறிவன். (வி. 93.) நற்றாள். (வி. 38.) தாதொழா அர். (வி. 37. 14.)]

[மறுமை வாழ்வு இன்னாருக்கு உண்டு.]

They who worship God shall flourish immortally.

3. மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ் வார்.

[எழு: சேர்ந்தார். பயனி: வாழ்வார். மலர் போலும் நெஞ்சை மலர் எ—து உவமை ஆகு பெயர். (வி. 162.) ஏகினான் எ—து விரைவு பற்றி நிகழ்காலம் மயங்கிவந்த போன காலம். (வி. 147.) ஏகினான் = ஏகினவனுடைய. (வி. 152. 95.) சேர்ந்தார். (வி. 95.) மிசை. (வி. 63.) அடி. (வி. 152.) நீடு எ—து வினையுரிச்சொல். (வி. 120.)]

[துன்பம் நீங்கும் வகை.]

No sorrows to those who worship the Passionless.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

[எழு: இடும்பை. பயனி: இல. சேர்ந்தார்க்கியாண்டும். (வி. 24.) வேண்டுதல் வேண்டாமை. (வி. 156. 94.) இலான் = இல்லாதவருடைய: தொகுத்தல் விகாரம். (வி. 41. 125.)]

[மனக்கவலை நீங்கும் வகை.]

No relief for mental anguish save to those who worship the Incomparable.

5. தனக்குவமை இல்லாதான் றாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது.

[எழு: மாற்றல். பயனி: அரிது. தனக்குவமை (வி. 74. 108. 27. 24.) இல்லாதான். (வி. 91. 95. 152.) இல்லாதான் றாள். (வி. 38.) அல்லான். (வி. 36.) அரிது எ-து இல்லை என்னும் பொருளில் வந்தது.]

[கடவுளை வணங்காதவர்.]

Reft of all sense is the head that bows not before Him Whose attributes are eightfold.

6. கோளில் பொறியிற் குணம் இலவே, எண் குணத்தான்
றாளை வணங்காத் தலை.

[எழு: தலை(கள்). பயனி: இல. கோளில் = கோள் இல்லாத. (வி. 153.) பொறியின் = பொறியைப் போல. (வி. 61.) எண் (வி. 159.) குணத்தான் எ-து பெயர்ப்பகுபதம். (வி. 123.) வணங்கா = வணங்காத. (வி. 91.)]

II. பாடம்.

LEARNING.

கல்வி.

[கல்வித் திருத்தம்.]

Learn on till difficulties vanish! Act up to what you have learned!

7. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

[எழு: ஒருவன். (தொகை.) பயனி: கற்க, நிற்க. (வி. 85.) அற. (வி. 140.) கற்பவை. (வி. 95.) அதற்கு. (வி. 71. 35.) தக. (வி. 120.)]

[கல்வியின் அருமை.]

Arithmetic and Grammar are two eyes.

8. எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டுங்,
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

[எழு: அறிந்தோர். (தொகை.) பயனி: என்ப. (வி. 83.) இவ்விரண்டும். (வி. 152. 113.) கணிதநூல்களும் இலக்கணநூல்களும் மனிதர்களுக்குக் கண்கள் ஆகும்.]

[கற்றோருடைய மேன்மை; அல்லோருடைய இழிவு.]

The learned have eyes; others have but two wounds in the face.

9. கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

[எழு: கற்றோர், கல்லாதவர். பயனி: கண்ணுடையர், புண்ணுடையர். என்பவர் = என்றுசொல்லப்படுவோர். முகத்து, (வி. 66. 152.) = முகத்தினிடத்தில்.]

[கற்றோருடைய உயர்வு.]

Joy in the advent of the learned. They are remembered after they depart.

10. உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

[எழு: தொழில். பயனி: அனைத்து. உவப்ப = மகிழும்படி. (வி. 86. 140.) உள்ள = நினைக்கும்படி. அனைத்து = அத்தன்மையையுடையதாம். (வி. 93.)]

[கல்வியின் விர்த்தி.]

As the well yields water the deeper it is dug, so learning.

11. தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

[எழு: கேணி, அறிவு. பயனி: ஊறும். தொட்டனைத்து = தோண்டிய அளவினதாக. அதுபோல். (தொகை. வி. 155.) கற்றனைத்து = கற்ற அளவினதாக. தொட்ட அனைத்து, கற்ற அனைத்து என்பவை செய்யுள் விகாரத்தினால் தொட்டனைத்து, கற்றனைத்து என வந்தன. (வி. 41.)]

[கல்விமானுக்கு எவ்விடமுந் தன்னிடம்.]

The learned at home every where.

12. யாதானு நாடாம் ஆல், ஊர் ஆம் ஆல், என் னொருவன்
சாந் துணையுங் கல்லாத வாறு?

[எழு: ஒருவன். பயனி: என். யாதானும் = யாதாயினும். ஆல், அசைநிலை. (வி. 116.) சாம் = சாகும். (வி. 87.)]

[கல்வியே பெருமை தரும்.]

Learning is indestructible wealth.

13. கேடில் விழுச் செல்வங் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

[எழு: கல்வி, மற்றையவை. பயனி: செல்வம், அல்ல. கேடில் = கேடில்லாத. (வி. 153.)]

III. பாடம்.

LEARNING.

கல்வி.

[படியாதவர் ஓர்அறிவுயிரினுங் கடையர்.]

The blockhead is like a tree.

14. கவை ஆகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவை எல்லாம் அல்ல மரங்கள்;
சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான், குறிப்பறிய
மாட்டா தவனே மரம்.

[எழு: அவை, மாட்டாதவன். பயனி: அல்ல, மரம். காட்டகத்தே. (வி. 63. 68.) நீட்டோலை. (வி. 153.) நின்றான் = நின்று. வாசியா = வாசியாமல். (வி. 90.) மாட்டாதவன். (வி. 125.)]

[கல்வியில்லாதவரின் செருக்கு.]

The Turkey-cock strutting about like the peacock, is like the ignorant learning poetry.

15. கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்
தானுந் தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

[எழு: கவி. பயனி: போலுமே. இருந்த. (வி. 124.) தான் உம் (வி. 116.)]

[கற்றோரும் மூடரும் ஒருவரை ஒருவர் விரும்பார்.]

16. நற்று மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்;
கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்;—முது காட்டிற்
காக்கை உகக்கும் பிணம்.

The learned seek the learned; the ignorant the ignorant. The swans and the crow.

[எழு: கற்றாரே, மூர்க்கர், காக்கை. பயனி: காமுறுவர், முகப்பர், உகக்கும். நற்றுமரை = நல் + தாமரை. (வி. 38.) கயத்தினல் = கயத்தில்நல். (வி. 39. 66. 24) பிணம் = பிணத்தை. (வி. 152.)]

[அரசினுங் கல்வியே மாட்சிமை.]

17. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்;
மன்னனுக்குத்
தன்றேசம் அல்லாற் சிறப்பில்லை, கற்றோற்குச்
சென்ற விடம் எல்லாஞ் சிறப்பு.

The king and the thoroughly learned man.

[எழு: கற்றோன், (வி. 95.) சிறப்பு. பயனி: உடையன், இல்லை, உண்டு, (தொகை.) (வி. 131.) அல்லால் = அல்லாமல்: இடைக்குறை. (வி. 41.) 12-ம் பாட்டையுங்காண்க. மன்னனும், கற்றோனும். (வி. 152. 113.)]

[கல்வியினல் உண்டாகும் நன்மைகள்.]

18. இம்மை பயக்கும் ஆல், ஈயக் குறைவின்றால்,
மெல்லிய
தம்மை விளக்கும் ஆல், தாம்உளராக் கேடின்றால்,
எம்மை உலகத்தும் யாங்காணேங் கல்வி போன்,
மம்மர் அறுக்கு மருந்து.

Learning is good for this life; may be given without decreasing; distinguishes the learner, and never perishes.

[எழு: யாம். பயனி: காணேம்.]

IV. பாடம்.

LEARNING.

கல்வி.

[கல்வியினால் உண்டாகும் இன்பம்; காமத்தால் உண்டாகுந் துன்பம்.]

Learning at first difficult, then yields pleasure. Lust at first pleasant, then yields pain.

19. தொடங்குங் காற்றுன்ப மாய், இன்பம் பயக்கும்,
மடங்கொன் றறி வகற்றுங் கல்வி;—
நெடுங் காமம்
முற் பயக்குஞ் சின் னீர இன்பத்தின், முற்றிழாய்!
பிற் பயக்கும் பீழை பெரிது.

[எழு: கல்வி, பீழை. பயனி: பயக்கும், அகற்றும், பெரிது. அகற்றும் = அகல்விக்கும். (வி. 103.) முற்றிழாய் எ—து மகடூஉ முன்னிலை = தொழில் முற்றிய ஆபரணத்தையுடைய பெண்ணே! (வி. 93. 64.) சின்னீர = சின்ன நீரையுடைய. நீர் எ—து தன்மை. (வி. 93.)]

[கல்விக்குச் சொல்வன்மையானது அழகாகும்.]

Learning must be adequately displayed in a suitable place. What is it without eloquence?

20. எத்துணைய தாயினுங் கல்வி இடம் அறிந்
துய்த்துணர் வில்லெனின் இல்லாகும்;
உய்த்துணர்ந்துஞ்
சொல் வன்மை இன்றெனின் என்னாம்? அஃதுண்டேற்
பொன் மலர் நாற்றம் உடைத்து.

[எழு: கல்வி, என், மலர். பயனி: இல்லாகும், ஆம், உடைத்து. உய்த்துணர்வு = உய்த்துணரும் உணர்வு. இன்று = இல் + து. (வி. 93.) உயத்துணர்ந்தும். (வி. 141.) பொன்மலர் = பொன்னால் ஆய மலர். (வி. 152.)]

[ஒன்றையாவது திருத்தமாக அறியவேண்டும்.]

21. வருந்தித் தாங் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்து சில கற்பான் றொடங்கல்,
கருந் தனங்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு ரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள் செய் திடல்.

It is folly to forget what we have already learned in trying to learn more.

[எழு: தொடங்கல். பயனி: செய்திடல் (போலுமே). கற்றன. (வி. 95. 152.) கற்பான் எ—து வினைஎச்சம். (வி. 86.) கருந்தனம். (வி. 121.) கருந்தனங்கைத்தலத்த=கையிடத்திலிருக்கிற கருந்தனத்தை. ஆங்கு, அசைச்சொல். செய்திடல். (வி. 124.) (5.)]

[கல்லாதவர் வீணுகப் பேசுவது.]

22. கற்பன ஊழ்அற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கம் இன் றாத்தை வாய் அங்காத்தன்,
மற்றுத் தம்
வல்லுரு வஞ்சன்மின் என்பவே மா பறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

The speech of those who have learnt, but do not act accordingly is as if a 'scare crow' should say to the birds, "fear me not!"

[எழு: அங்காத்தல். பயனி: போல். கற்பன ஊழ்=நூல்களைக்கற்கும் நல்வினை. கழகத்து. (வி. 152. 66.) "மிருகங்கள் பறவைகள் புல்லினலாய உருவத்திற்குப் பயப்படுவ போலத் தமது வலிய உருவத்திற்கு நீவிர் பயப்படாதிருங்கள் எனச் சொல்லுவபோலும்." அஞ்சன்மின். (வி. 92.)]

[கல்வியின் சிறப்பு.]

23. குஞ்சி அழகுங், கொடுந்தானைக் கோட்டழகும்,
மஞ்சள் அழகும் அழகல்ல;
நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்,
கல்வி அழகே அழகு.

The learning of the conscientious and just is beauty.

[எழு: அழகு, அழகு. பயனி: அல்ல, அழகு. கோட்டழகு=கோட்டின் அழகு. நெஞ்சத்து. (வி. 152.) நல்லம் (வி. 93.)]

V. பாடம்.

THE LEARNED.

கற்றோர்.

[கற்றோரது சிறப்பு.]

24. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

Salt from the marsh, worth more than paddy from the rice-field.

[எழு: சான்றோர், கடைநிலத்தோர். பயனி: கொள்வர், படும். உப்பினை. (வி. 65.) விளை. (வி. 153.) விழுமிதா = விழுமியது + ஆ = ஆக. (வி. 93.) வைக்கப்படும் = வைக்கப்படுவோர். (வி. 137.)]

[கல்வியை விரைவாகவும் விவேகமாகவும் கற்க வேண்டியது.]

25. கல்வி கரையில; கற்பவர் நாள் சில;
மெல்ல நினைக்கிற் பிணி பல;
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
பால் உண் குருகிற் றெரிந்து.

Learning has no bounds. The learner's days are few. The swan. Discernment necessary.

[எழு: கல்வி, நாள், பிணி. பயனி: இல, சில, பல. நினைக்கில். (வி. 86.) தெள்ளிதின். (வி. 65. 152.) கற்பவே. (வி. 85.) உண். (வி. 153.) குருகின் (வி. 61.) = அன்னம்போல.]

[கல்விகற்றவனுடைய வருணத்தை நினைக்கவேண்டாம்.]

26. தோணி இயக்குவான் ரெல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார்,
காணுய்!
அவன் றுணையா ஆறு போயற்றே, நூல் கற்ற
மகன் றுணையா நல்ல கொளல்!

Never mind the boatman's caste if he take you over!

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: இகழார், கொளல். (வி. 85.) தோணி = தோணியை. அவன் = அவனையே. ஆறு = ஆற்றை. (வி. 152.) போயற்று = போய் அற்று. இதில், போய் = போனல். (வி. 137.) நல்ல கொளல் = நல்லவை கற்றுக்கொள்ளக்கடவாய் ரெல்லை. றுணை. (வி. 38.)]

[கற்றூர், கல்லாதவர் கொள்ளும் நட்பின் இயல்பு.]

27. கனை கடற் றண் சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்பு தின்றற்றே;
நுனி நீக்கித்
தூரிற் றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரம் இலாளர் தொடர்பு.

The friendship of the learned ever grows sweeter, that of the unlearned ever diminishes in sweetness.

[எழு: கேண்மை, தொடர்பு. பயனி: தின்றற்று, தகைத்து. கனை கடற்றண் சேர்ப்ப. (வி. 153. 152. 50. 64.) தின்றன்ன, தின்றற்றே = தின்றுற்போலும். (வி. 137.) அரோ, அசைநிலை.]

[கற்றவரின் சாவகாசம்.]

28. கல்லாரே ஆயினுங் கற்றோரைச் சேர்ந்தொழுகின்
நல் லறிவு நாளுந் தலைப்படுவர்;
தொல் சிறப்பின்
ஒண் ணிறப் பாதிரிப் பூச் சேர்தலாற் புத் தோடு
தண்ணீர்க்குத் தான் பயந் தாங்கு.

The benefits of association with the learned. The pot impregnated with odour.

[எழு: மனிதர். (தொகை.) பயனி: தலைப்படுவர். ஆயினும். (வி. 141.) படுவர். (வி. 124.) ஒண்ணிறப் பாதிரிப்பூ = ஒள்ளிய நிறத்

தையுடைய பாதிரி மரத்தினது பூ. (வி. 152. &c.) புத்தோடு = புதிய ஓடு. (வி. 121.) பயந்தாங்கு = பயன்பட்டாற்போலும். (வி. 137.) நாளும். (வி. 113.)]

[ஞான நூலின் முதன்மை.]

29. அலகு சால் கற்பின் அறிவு நூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாங்
கலகல
கூஉந் துணை அல்லாற், கொண்டு தடுமாற்றம்
போஒந் துணை அறிவார் இல்.

Books of wisdom the best. Others cannot remove confusion of mind.

[எழு: அறிவார். பயனி: இல். அலகு சால் = எண் அமைந்த நூல்களை. (வி. 157.) கற்பின். (வி. 86.) கூஉம், போம் = கூவும், போகும். (வி. 14. 87.)]

VI. பாடம்.

IGNORANCE.

கல்லாமை.

[கல்லாதவருடைய சபை.]

30. அரங்கின்றி வட்டாடி அற்றே,
நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல்.

A congregation without learning like draughts without a board.

[எழு: கொளல். பயனி: அற்றே. (வி. 137.) இன்றி = இல்லாமல், குறிப்பு வினை எச்சம். (வி. 93.) கொளல். (வி. 94. 41. (6.)]

[கல்லாதவர் மௌனமாக இருக்க வேண்டியது.]

31. கல்லா தவரும் நனி நல்லர், கற்றார் முற்
சொல்லா திருக்கப் பெறின்.

The ignorant betrayed by their speech.

[எழு: கல்லாதவர். பயனி. நல்லர். உம். (வி. 113.) நனி. (வி. 120.) பெறின். (வி. 86.)]

[கல்லாதவர் பயன்படார்.]

The unlearned like barren salt soil.

32. உளர் என்னு மாத்திரையர் அல்லாற் பயவாக்
களர் அனையர் கல்லா தவர்.

[எழு: கல்லாதவர். பயனி: அனையர். என்னும். (வி. 87. (3.) 114.) பயவா. (வி. 91.)]

[கல்லார் உயிரற்ற பதுமைகள் போலும்.]

The beauty of the unintellectual like that of a wooden doll.

33. நுண்மா ணுழைபுலம் இல்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை அற்று.

[எழு: நலம். பயனி: அற்று. நுண்மாண்நுழை புலம்=நுட்பமாகிய மாட்சிமைப்பட்ட பல நூல்களிலுஞ் சென்ற அறிவு. (வி. 153. 154.) எழில் நலம். (வி. 39. 156.)]

[கல்லாதவரின் செல்வஞ் செல்வம் அல்ல.]

Poverty with the good better than wealth with the unlearned.

34. நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

[எழு: திரு. பயனி: இன்னாதே. நல்லார்கண். (வி. 63. 34.) வறுமையின் = வறுமையிலும். (வி. 61. ஒப்பு.)]

[கல்லாதவரின் குலம்.]

The learned of low origin better than the unlearned of high family.

35. மேற் பிறந்தார் ஆயினுங் கல்லாதார், கீழ்ப் பிறந்துங்
கற்றார் அனைத்திலர் பாடு.

[எழு: கல்லாதார். பயனி: இலர். கற்றார் அனைத்திலர் பாடு = கற்றவருடைய பெருமை அளவினதாகிய பெருமையை இல்லாதவர்கள் ஆவார்கள்.]

[கற்றவரே மனிதர், மற்றவர் விலங்குகள்.]

The learned are men; the unlearned beasts.

36. விலங்கொடு மக்கள் அனையர்,
இலங்கு நூல் கற்றாரோ டேனை யவர்.

[எழு: ஏனையவர். பயனி: அனையர். இலங்குநூல் = விளங்கியநூலை. (வி. 153. 152.)]

VII. பாடம்.

FOLLY.

புல்லறிவாண்மை.

[கற்றவர் சொல்லைக் கல்லாதவர் இகழ்தல்.]

37. அருளின் அறம் உரைக்கும் அன்புடையார் வாய்ச் சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்;
பொருள் அல்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும்: பாற் கூழை
மூழை சுவைஉணரா தாங்கு.

The ladle does not taste the milk porridge. The wise only value the wise.

[எழு: புலவர், ஏழை. பயனி: கொள்வர், உரைக்கும். (வி. 149.) உணராதாங்கு = அறியாததுபோலும்.]

[கல்லாதவன் வீண்பேச்சுகளைப் பேச விரும்புவது.]

38. பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டுங்
கறுவினாற்
கோத்தின்னா கூறி உரை யாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

A fool angry without cause, full of passion, longs to abuse.

[எழு: நா. பயனி: தின்னும். இன்றியும். (வி. 141.) மாட்டும். (வி. 63. 68. 113.) உரையா. (வி. 91.) நல்ல. (வி. 120.) சுனைத்து. (வி. 133.)]

[கல்லாதவர் அறிவை இகழ்தல்.]

39. கல்வியான் ஆய கழிநுட்பங் கல்லார்முற்
சொல்லிய நல்லவுந் தீய வாம்;
எல்லாம்
இவர்வரை நாட! தமரை இல்லார்க்கு
நகரமுங் காடுபோன் றாங்கு.

Good things become evil if uttered in the presence of the undiscriminating.

[எழு: நல்ல = நல்லவைகள். பயனி: தீயவாம் = தீயவைகள் ஆகும். நுட்பம், இரண்டாம் வேற்றுமைத்தொகை. இவர். (வி. 153.)]

[பேதைகள் கேட்டாலும் அறிவு அடையார்கள்.]

40. பூவாதே காய்க்கு' மரமும் உள; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாம் உளரே;
தூவா
விதைத்தாலு' நன்றாகா வித்தெனவே, பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

Some trees fruit without blossoming. Some men understand without being taught. The instruction of the foolish like seeds sown in vain.

[எழு: மரம், உணர்வார், உணர்வு. பயனி: உள, உளரே, தோன்றாது. பூவாது. (வி. 90.) தூவா. (வி. 86.) விதைத்தாலும். (வி. 142.) உள, உளர். (வி. 125.) மக்களுளும். (வி. 63. 113.) எனவே. (வி. 114.)]

[கற்றதற்குத் தக்க ஒழுக்கம்.]

41. கற்றுப் பிறர்க்குரைத்துத் தா'நில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை:
"சொற்ற நீர்
நிலலாத தென்" என்று நாண்உரைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

The empty words of those who teach, but do not practice, are only powerful to reprove themselves.

[எழு: வலியுடைமை. பயனி: உண்டு. வெற்றுரை. (வி. 119.) வலியுடைமை. (வி. 150.) சொற்ற=சொன்ன. உரைப்ப. (வி. 86. (3.) 140.) சொல்லாமே = சொல்லாமல் சொலல். (வி. 94.)]

[பேதைகளுக்குக் கல்வியைச் சொல்லிய குற்றம்.]

42. கற்றன கல்லார் செவி மாட்டிக் கை உறாஉங்
குற்றந் தமதே, பிறிதன்று;
முற்றுணர்ந்துந்
தாம் அவர் தன்மை உணராதார் தம் முணரா
ஏதிலரை நோவ தெவன்?

They are to be blamed who teach those who will not learn.

[எழு: குற்றம், நோவது. பயனி: அன்று, எவன். கற்றன = தாங் கற்ற பொருள்களை. தமது. (வி. 74.) அவர் = ஏதிலாருடைய. தம்முணரா=தங்களுடைய இயல்பை உணராத. (வி. 152. 91.) அன்று. (வி. 125.)]

VIII. பாடம்.

THE GOOD AND THE EVIL.

நல்லோர்; தீயோர்.

[இழிவோருக்குப் புத்திசொன்னாலுங் கேட்டுணரார்.]

The serpent sleeps unmoved, breathing heavily while fire is heaped at the entrance of its hole.

43. கண்கூடாப் பட்டது கேட்டெனினுங் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சி? மற் றில்லாகும்:
மண்டெரி
தான் வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ,
பேரா, பெருமூச் செறிந்து.

[எழு: உணர்ச்சி, மாசுணம். பயனி: இல்லாகும், துயிலவ. மண்டெரி = மண்டும் எரி. (வி. 153.) கண்டுயில்வ = கண்துயில்வன. (வி. 37. 83.) பேரா = பெயராமல். (வி. 90.) கேட்டெனினும். (வி. 24. 142.) மற்று, தான் = அசைச்சொற்கள். ஆ = ஆக. எனினும். (வி. 142.) மக்கள். (வி. 68.)]

[இன்னார் கற்றவர்; இன்னார் கல்லாதவர்.]

The unintelligent, learning never learn. The intelligent perceive without learning.

44. ஓதியும் ஓதார் உணர் விலார், ஓதாதும்
ஓதி அனையர் உணர்வுடையார்;
தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வர் இரவாதார்; செல்வரு
நல்கூர்ந்தார் ஈயார் எனின்.

[எழு: உணர்விலார், உணர்வுடையார், இரவாதார், செல்வர் பயனி: ஓதார், அனையர், செல்வர், நல்கூர்ந்தார். ஓதியும், ஓதாதும், நல்கூர்ந்தும். (வி. 141.) ஓதி அனையர் = ஓதினரோடு ஒப்பார். தூய்தாக. (வி. 93. 120.) எனின். (வி. 86.)]

[நல்லோர் ஐக்கியம்.]

45. நல்லாரைக் காண்பதுவு' நன்றே; நல' மிக்க
நல்லார் சொற் கேட்பதுவு' நன்றே;
நல்லார்
குணங்கள் உரைப்பதுவு' நன்றே; அவரோ
'டிணங்கி இருப்பதுவு' நன்று.

Association with the good.

[எழு: காண்பது, கேட்பது, உரைப்பது, இருப்பது. பயனி: நன்று. நல்லாரைக் காண்பதுவும். (வி. 145. 23. 24.) நன்று. (வி. 93.) மிக்க. (வி. 120.)]

[தீயோர் ஐக்கியம்.]

46. தீயாரைக் காண்பதுவுந்' தீதே; திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவுந் தீதே;
தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே; அவரோ
'டிணங்கி இருப்பதுவுந் தீது.

Association with the evil.

[எழு: காண்பது, கேட்பது, உரைப்பது, இருப்பது. பயனி: தீது. அற்ற. (வி. 87. (1.) பகுதி: அறு. 82. (6.) தீயார். (வி. 93.)]

[நல்லாரைப் பற்றி எல்லாரும் வாழ்தல்.]

47. நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் அங்கே புசியும் ஆங்;
தொல் லுலகில்
நல்லார் ஒருவர் உளர் ஏல் அவர் பொருட்
'டெல்லார்க்கும் பெய்யு' மழை.

When the paddy is watered, the grass on the borders too is profited. If there be one good person, for his sake the rain falls.

[எழு: நீர், மழை. பயனி: புசியும், பெய்யும். பொருட்டு. (வி. 60.) தொல்லுலகில். (வி. 119.) உளர் ஏல் = இருப்பாராகில். (வி. 86.)]

IX. பாடம்.

THE FRIENDSHIP OF THE GOOD.

நல்லோர் சிநேகம்.

[செல்வம் நீங்கின இடத்தும் கைவிடாதவரையே உறவாகக் கொள்க.]

48. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்; அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

The water-fowl forsakes the dried-up tank. The water plants remain in it.

[எழு: தீர்வார், உறுவர். பயனி: அல்லார், உறவு. நீர்ப்பறவை எ–து தொடர்மொழி. (வி. 150.) உற்றுழி = (செல்வத்தின் இறுதி) உற்ற உழி, இடைக்குறை. (வி. 41.) இது இன்னிசை வெண்பா. (வி. 190.) அக்குளத்தில். (வி. 25.)]

[இனமே உறவல்ல.]

49. உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா;
உடன் பிறந்தே கொல்லும் வியாதி;
உடன்பிறவா
மா மலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்;
அம்மருந்து போல்வாரும் உண்டு.

Innate disease slays. Medicine from the far off hills cures.

[எழு: நீ (தொகை), வியாதி, மருந்து, போல்வாரும். பயனி: வேண்டா, கொல்லும், தீர்க்கும், உண்டு. வேண்டா. (வி. 89.) போல்வார். (வி. 95.) உடன்பிறந்தார் (வி. 150.) என்று. (வி. 114.) உளர் எ–கு உண்டு எ–து வழுவமைதி (வி. 137. 125.)]

[உதவி செய்யாதவர் நட்பு.]

What avails the friendship of those who though near aid not? The channel far off brings fertility.

50. நாய்க்காற் சிறுவிரல்போ ன்ன்கணியர் ஆயினும்
ஈக்காற் றுணையும் உதவாதார் நட்பென்னும்?
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ் செய் வினைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு.

[எழு: நட்பு, ஒருவர். (தொகை.) பயனி: என்னும், வேண்டும். செயப்படுபொருள்: தொடர்பை. நாய்க்கால், ஈக்கால். (வி. 152.)]

[நல்லோர் வரவினால் இன்பமுந், தீயோர் வரவினால் துன்பமும் உண்டாம்.]

The mighty rejoice in the presence of the good and lament over the presence of the bad. The south-wind and the whirl-wind.

51. நல்லோர் வரவா னகை முகங் கொண் டின்புறீஇ,
அல்லோர் வரவான் அழுங்குவார்
வல்லோர்;
திருந்துந் தளிர்காட்டித் தென்றல் வரத் தேமா
வருந்துஞ் சுழல் கால் வர.

[எழு: வல்லோர், தேமா. பயனி: அழுங்குவார், திருந்தும், வருந்தும். நகைமுகம். (வி. 153.) இன்புறீஇ = இன்பு உற்று. (வி. 17. 79.) வர. (வி. 140.) வரவானகை = வரவால் நகை. (வி. 39.)]

[இஸ்திரீகளுடைய வீண்பேச்சுகளைக்கேட்டால் மனஉறுதி தளர்ந்து போகும்.]

Stone hollowed out by the incessant treading of ants. The vain talk of women destroys strength of mind.

52. பகர்ச்சி மடவார் பயில, நோன் பாற்றல்
திகழ்ச்சி தரு நெஞ்சத் திட்ப
நெகிழ்ச்சி
பெறும்; பூரிக் கின்ற் முலைப்பேதாய்! பல கால்
எறும்பூரக் கற் குழியு மே.

[பகர்ச்சி, இரண்டாம் வேற்றுமைத் தொகை. மடவார், மூன்றும் வேற்றுமைத் தொகை. பயில, ஊர. (வி. 140.) நோன்பாற்றல் திகழ்ச்சி தரும் = நோன்பினால் உண்டாகும் ஆற்றலில் விளங்கும். (வி. 152. 157.) பேதாய் = பேதையே! (வி. 64.)]

[புத்தியுள்ள ஆலோசனை.]

53. அறிமின் அற'நெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர் கடுஞ் சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினை தீயார் கேண்மை; எஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச் சொல்.

Virtue. Death. Bitter words. Deceit. The friendship of the wicked. The words of the great.

[எழு: நீர். (தொகை.) பயனி: ஐந்துவினைகளும்: செயப்படுபொருள்: நெறியை, குற்றத்தை, சொல்லை, வஞ்சத்தை, கேண்மையை, சொல்லை. அறிமின். (வி. 84.) வினைதீயார் = தீவினையாருடைய.)]

X. பாடம்.

ASSOCIATION WITH THE GOOD.

நல்லினஞ்சேரல்.

[நல்லினஞ் சேர்தலால்ஆகிய பெருமை.]

54. ஊர்அங் கண நீர் உரவு நீர்ச் சேர்ந் தக் கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தம் ஆம்;
ஓருங்,
குல மாட்சி இல்லாருங் குன்றுபோ னிற்பர்,
நல மாட்சி நல்லாரைச் சார்ந்து.

The village stream becomes a sacred river. Greatness from association with the great.

[எழு: நீர், இல்லார். பயனி: ஆம், நிற்பர். (ஊர், ஏழாம்வேற்றுமைத் தொகை.) உரவுநீர் = ஆற்றுநீர். சேர்ந்தக்கால். (வி. 87.)

[நல்லினஞ் சேர்தலால் ஆகிய துணை.]

55. கொல்லை இரும் புனத்துக் குற்றி அடைந்த புல்
ஒல்காவே ஆகும் உழவர் உழு படைக்கு;
மெல்லியரே ஆயினு' நற் சார்வு சார்ந்தார் மேற்
செல்லா வாஞ் செற்றார் சினம்.

Grass near the stump saved from the plough-share.

[எழு: புல், சினம். பயனி: ஆகும், ஆம். ஒல்கா, செல்லா, எதிர்மறை வினைஎச்சம். (வி. 90.) புனத்து = புனத்திினிடத்தில். (வி. 68. 152.)]

[நல்வினத்தால் நன்மையுந் தீயினத்தால் சிதைவும் உண்டாகும்.]

56. நில நலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குல நலத்தால் ஆகுவர் சான்றோர்; கல நலத்தைத்
தீ வளி சென்று சிதைத்தாங்கு சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

Good and bad connections. Rice depends on the soil. The boat and the whirlwind.

[எழு: சான்றோர், சான்றாண்மை. பயனி: ஆகுவர், கெடும். நில நலத்தால் = நிலத்தினுடைய நன்மையினால். (வி. 152.) தத்தம் = தம் தம். (வி. 74.) சேர. (வி. 140.) தீவளி. (வி. 119.)

[தீயோரைச் சேர்ந்தால் அழிவு உண்டாம்.]

57. மனத்தான் மறுவிலர் ஏனுந் தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்;
புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே,
எறி புனந் தீப்பட்டக் கால்.

Even the blameless are despised on account of their association. Sandal wood and Vengei burnt with the rest of the jungle.

[எழு: மனிதர் (தொகை), சந்தனமும் வேங்கையும். பயனி: இகழப்படுவார், வேம். மனத்தான் = மனத்தில். (வி. 137.) வேம். (வி. 82. (7.)]

[கற்றோருடைய நட்பு நாளுக்குநாள் அதிக நன்மையைத் தரும்.]

58. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்பு தின் றற்றே;
குருத்திற்
கெதிர் செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம் இ லாளர் தொடர்பு.

Friendship of the good ever increasing in sweetness; and vice versa.

[எழு: கேண்மை, தொடர்பு. பயனி: தின்றற்றே, தகைத்து. அன்ன, அற்று. (வி. 109.) குருத்தில் = குருத்துத்தொடங்கி.]

[நீதியரோடு நட்புக்கொள்ள வேண்டும்.]

59. இற்பிறப் பெண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடைக் கொண்டமை அல்லது,—
பொற்கேழ்
புனல்ஒழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட!
மனம்அறியப் பட்டதொன் றன்று.

Some select high-born friends, not examining their qualities.

[எழு: ஒன்று. பயனி: அன்று. கொண்டமை. (வி. 94.) பூங்குன்ற நாட = பொலிவையுடைய மலை நாடனே! (வி. 119. 64.)]

XI. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[யானை, நாய், என்பவற்றின் குணம்.]

60. யானை அனையவர் நண்பொரீஇ நாய்அனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்;
யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

The elephant and the dog, types of false and true friends.

[எழு: ஒருவர் (தொகை), யானை, நாய். பயனி: வேண்டும், கொல்லும், குழைக்கும். ஒரீஇ = ஒருவி. கெழீஇ = கெழுவி. (வி. 79.) எறிந்த வேல். (வி. 143.) மெய்யதா = மெய்யது, ஆ. இதில் மெய்யது எ—து ஏழாம் வேற்றுமை மயக்கமாகவந்த ஆறும் வேற்றுமை. (வி. 62.) (137.*) ஆ=ஆக. (வி. 140.)]

[அன்பில்லாதவர் நட்பாகார்; அன்புள்ளவர் என்றும் வேருகார்.]

61. பலநாளும் பக்கத்தார் ஆயினு' நெஞ்சிற்
சிலநாளும் ஒட்டாரோ டொ'ட்டார்;
பலநாளு'
நீத்தார் எனக்கை விடல்உண்டோ, தன்னெ'ஞ்சத்
தி'யாத்தாரோ டியாத்த தொடர்பு.

The uncongenial, though long near one, never become intimate: those who are one's bosom friends do not cease to be so because far away.

[எழு: மனிதர் (தொகை), விடல். பயனி: ஒட்டார், உண்டோ. நெஞ்சத்து=நெஞ்சிஞலே. (வி. 152.) நெஞ்சத்தியாத்தாரோடு. (வி. 24.)]

[கொம்பில் பூத்த பூவும், குளத்தில் பூத்த பூவும்.]

62. கோட்டுப் பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா' நட்பாட்சி;
தோட்ட
கயப் பூப் போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு' நட்பாரும் இல்.

True friendship like the flower of a tree expands and shuts no more; but none can love those who like the flower in the tank shut (their hearts) again after they have been once opened.

[எழு: நட்பாட்சி நயப்பாரும், நட்பாரும். பயனி: ஆம், இல். கோட்டுப்பூ. (வி. 68. 119.) வேட்டது. (வேள்-கிறேன்-வேட்டேன்.) (வி. 95.) நட்பாட்சி. (வி. 150. 96.) தோட்ட = தோண்டின.]

[கடை, இடை, தலையானவர் நட்பு இன்னது.]

63. கடையாயார் நட்பிற் கமுக'னையர்; ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்;
தலையாயார்
எ'ண்ணரும் பெ'ண்ணை போன் றி'ட்ட ஞான் றிட்டதே;
தொன்மை உடையார் தொடர்பு.

[எழு: கடையாயார், இடையாயார், தலையாயார், உடையார். பயனி: அனையர், அனையர், இட்டதே, சொன்னூர் (தொகை.) கடையாயார்= கடைவரிசையில் உள்ளார். ஆயார் = ஆகிஞர். (வி. 82. (7.)) அனையர். (வி. 109.) எண்ணரும் = எண்ணுதற்கரிய. (வி. 153. 121.)]

[அன்போடு பொருந்திய உபசாரம்; அன்பின்றிச் செய்த உபசாரம்.]

64. கழுநீருட் கார் அட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்;
விழுமிய
குய்த்துவை யார் வெண் சோறே ஆயினும் மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

A dinner of herbs with affection is ambrosia. The greatest delicacies without it, nux-vomica.

[எழு: அடகு, உண்டல். பயனி: ஆம், காய் (ஆகும்.) கார். (வி. 121. 154.) விழுமிதா = விழுமியது + ஆ = ஆக. (வி. 93.)]

[இவற்றில் இவை நல்லனவாம்.]

65. தெளிவிலார் நட்பிற் பகை நன்று; சாதல்
விளியா வருநோயி னன்றால்;
அளிய
இகழ்தலிற் கோறல் இனிதே மற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

Hatred better than the friendship of the unwise; death than incurable disease; to be killed than to be despised; abuse than undeserved praise.

[எழு: பகை, சாதல், கோறல், வைதல். பயனி: நன்று, நன்று, இனிது, நன்று. நட்பில். (வி. 61. ஒப்பு.) ஆல், ஏ, மற்று, அசைச்சொற்கள். அளிய. (வி. 140.) கோறல் = கொல்லல். (வி. 41.)]

XII. பாடம்.

ON BEARING WITH THE FAULTS (OF ONE'S FRIENDS.)

பிழைபொறுத்தல்.

[எதினும் பிரிதல் தீது.]

66. மரீஇப் பலரொடு பன்னாண் முயங்கிப்,
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்;—
பரீஇ உயிர்சேதுக்கும் பாம்போடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு.

Examine well and form friendships only with the excellent. *Never forsake a friend!*

[எழு: ஒருவர் (தொகை), பிரிவு. பயனி: வேண்டும், இன்னா. செயப்படு: தக்காரை. ஏ—அசைநிலை. மரீஇ, பொரீஇ, பரீஇ. (வி. 79.) பன்னாண் = பல்நாள். (வி. 39. 36.) பொருட்டக்கார் = பொருளாகத்தக்கவர். (வி. 57. 37.)]

[சிநேகர் குற்றங்களைத் தம்முள்ளத்தில் மறைக்கவேண்டும்;
குற்றமில்லாதவர் பூவுலகிலில்லை.]

67. நல்லார் எனத்தா' நனி விரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக் குமிஉண்டு; நீர்க்கு நுரைஉண்டு;
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

Bear with the faults of friends. None faultless

[எழு: ஒருவர் (தொகை), உமி, நுரை, புல்லிதழ். பயனி: வேண்டும், உண்டு. என. (வி. 114.) நனி. (வி. 120.) கொண்டாரை. (வி. 124. (5.)) புல்லிதழ். (வி. 150.) பூவிற்கும் = பூ + இன் + கு + உம். (வி. 23. 65. 35. 24.)]

[நல்லோர் பிழை பொறுப்பர்.]

68. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்,
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்;
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

Bear with your friends' faults, as the cultivator bears with the stream that often bursts its enclosures.

[எழு: வாழ்நர், கொண்டார். பயனி: செய்வர், பொறுப்பர். ஏ, அசைநிலே. செறுத்தோறும் = செறுக்குந்தோறும். (வி. 153.) நீர் நசை = நீரை நசைந்து, அல்லது நீரின் நசையினால். (வி. 153.) வாழ்நர். (வி.95 = வாழ்வர்.)]

[பொறுத்தல் நட்பை வளர்க்கும்.]

69. இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொருத்த றருவதொன் றன்றோ?—
நிறக் கோங்
குருவ வண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறை இருவர் நட்பு.

Bear all things! The patience of one is the friendship of two.

[எழு: பொறுத்தல், பொறை. பயனி: தருவது, நட்பு (ஆகும்.) இறப்பவே.* (வி. 140.) நிறக்கோங்கு உருவ வண்டு ஆர்க்கும் உயர் வரை நாட! = பொன்னிறத்த கோங்கம் பூவிலே அழகிய வண்டுகள் ஆர்ப்பரிக்கும் உயர்ந்த மலை நாடனே. (வி. 152. 162.) ஒருவர், இருவர். (வி. 159.)]

*"Though they do things so bad as to pass (the limits of forbearance)."

[நட்டார் செய்த பிழையால் அதிக மனவருத்தம் உண்டாகும்.]

70. மடி திரை* தந்திட்ட வான் கதிர் முத்தங்
கடு விசை நாவாய் கரை அலைக்குஞ் சேர்ப்ப!
விடுதற் கரியார் இயல்பிலர்எல் நெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

"To be wroth with those we love, doth work like madness in the brain!"

*"EVER CURLING WAVES."

[எழு: அரியார். பயனி: தீ (ஆவார்.) மடிதிரை. (வி. 153.) தந்திட்ட (வி. 124. (5.)) கடு. (வி. 119.)]

☞ The student will recognize in this and many other verses from the நாலடி a beautiful description of the old pandiyan country, with its seaboard (சேர்ப்பு,) its extensive forests, and limiting hills, (வரை.)

XIII. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[நண்பரைப் பிழையின் பொருட்டுப் பிரியல் ஆகாது.]

71. இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்த றகுவதோ?—
துன்னருஞ் சீர்
விண் குத்து நீள் வரை வெற்ப! களைபவோ
கண் குத்திற் றென்று தங் கை?

Friends are not to be forsaken on account of their faults. Do men cut off their hand because it has struck their eye?

[எழு: துறத்தல், மனிதர் (தொகை.) பயனி: தகுவதோ, களைபவோ. துன்னருஞ் சீர் விண்குத்து நீள் வரை வெற்ப! = கிட்டுதற்கு அரிய நன்மையை உடைய வானைப் பொருந்திய நீண்ட மலை நாடனே! களைப. (வி. 83.) குத்திற்று. (வி. 83.) துன்னா. (வி.) 90.]

[சிநேகிதனை விட்டுப்பிரிந்தவர் பிழை செய்தவரிலுங் கடையர்.]

72. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்;
கலந்தபிற்
றீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரிற் கடை.

Those who forsake friends that have committed a fault are worse than they.

[எழு: சான்றோர், இல்லாதார். பயனி: காணார், கடை (ஆவர்.) செயப்படு: பழியை. கலந்து = நட்புக்கொண்டபின். நட்பனைத்திருத்த வேண்டுமே அல்லாமல் அவர்களுடைய குற்றங்களைப் பலர்க்கு அறிவிக்கக் கூடாது. அவரில். (வி. 61.)]

[சிநேகிதன் பிழைகளை வெளிப்படுத்தல் ஆகாது.]

73. தமர் என்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமர் அன்மை தாம் அறிந்தார் ஆயின், அவரைத்
தமரினு நன்கு மதித்துத், தமர் அன்மை
தம்முள் ளடக்கிக் கொளல்.

If friends prove unfaithful, love them the more, and keep their unfaithfulness in your own bosom.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: அடக்கிக்கொளல். தமர். (வி. 123.) அன்மை. (வி. 94. 152.) தம், சாரியை. (வி. 108. 74.) நன்கு. (வி. 120.) கொளல். (வி. 85.)]

[சிநேகிதர் குற்றங்களை வெளிப்படத் தூற்றினவன் சாபம்.]

74. குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபி னாடித் திரிவேன்யான்
நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க,
அறைகடல் சூழ் வையநக.
[பாட்டு 80 காண்க.]

He who pries into his friends faults shares the punishment of the revealer of secrets.

[எழு: யான். (தொகை.) பயனி: செல்க. காவா = காக்காமல் செல்வுழி = (செல், வ், உழி.) (வி. 153. 63. 152. 25.) செல்க. (வி. 85.)]

[நல்லோர் நட்பு மழையைப்போலும்; தீயோர் நட்பு வறட்சியைப்போலும்.]

75. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்,
மாரி போன் மாண்ட பயத்ததாம்;
மாரி
வறந்தக்காற் போலுமே,— வால் அருவி நாட!—
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

The friendship of the excellent like rain; of others like drought.

[எழு: கேண்மை, நட்பு. பயனி: ஆம், போலும். ஏ, அசை நிலை. சீரியார் = சீரையுடையர். (வி. 93.) சிறப்பிற்றாய் = (சிறப்பு + இன் + து + ஆய்) = சிறப்பினையுடையதாகி. (வி. 93.) பயத்ததாம் = பயனையுடையதாம். (வி. 93.)]

XIV. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[அறிவுள்ளோர் சிநேகம் மோட்சத்தைப்போலவும்; அறிவில்லார் சிநேகம் நரகத்தைப் போலவும் ஆகும்.]

76. நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்;
நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லாப்
புணர்த னிரயத்துள் ஒன்று.

Bliss enjoyed with the wise is heaven; association with the ignorant and worthless is hell.

[எழு: நுகர்வுடைமை. பயனி: விழைவிற்று, ஒன்று (ஆகும்.) ஏ, ஆல், அசைநிலைகள். நுகர்வுடைமை (நுகர், வ், உடைமை.). (வி. 153.) விழைவிற்று = விழைவினது. (வி. 93.) ஒக்கும். (வி. 125.)]

[அன்பில்லாருடன் கொண்டநட்பு நிலைநில்லாது.]

77. பெருகுவது போலத் தோன்றி வைத் தீப் போல்
ஒரு பொழுதுஞ் செல்லாதே நந்தும்;—
அருகெல்லாஞ்
சந்தன நீள் சோலைச் சாரன் மலை நாட!—
பந்தம் இ லாளர் தொடர்பு.

Intimacy with those who have no sympathy is like fire in the stubble.

[எழு: தொடர். பயனி: நந்தும். வைத்தீப்போல் = வைக்கோல் நெருப்பைப்போல். (வி. 132.) நீள் = நீண்ட. (வி. 153.)]

[பெரியோருடன் நட்புக்கொண்டாலுங் கீழோர் நல்லோர் ஆகார்.]

78. ஒரு நீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரி நீர்க் குவளையை ஆம்பல் ஒக் கல்லா,
பெரு நீரார் கேண்மை கொளினு நீர் அல்லார்
கருமங்கள் வேறு படும்.

The water-lily does not become a lotus by being in the same tank with it: so evil persons will act in conformity with their natures.

[எழு: ஆம்பல், கருமங்கள். பயனி: அல்லா, வேறுபடும். செயப்படு: குவளையை. நீர் = நீரிலே. (வி. 152.) கடைத்தும் = இடத்தை உடையன ஆயினும். (வி. 93. 113.) ஒக்கல்லா = ஒக்க மாட்டாது. (ஒக்கு + அல்லா.) (வி. 125.89.) கொளினும்=கொண்டாலும். (வி. 86. 142.)]

[உரிமையில்லாதவரது நட்பு தீது.]

79. முற்றற் சிறு மந்தி முற் பட்ட தந்தையை
நெற்றுக் கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலை நாட! இன்னதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

Friendship with the uncongenial is bad.

[எழு: நட்பு. பயனி: இன்னது. முற்றல் = முற்று + அல்லாத. (வி. 153.)]

[நண்பனது குறைதீராதவனுக்கு உறுஞ்சாபம்.]

80. முட்டுற்ற போழ்தின் முடுகி, என் னார் உயிரை
நட்டான் ஒருவன் கை நீட்டேன் ஏல்,
நட்டான்
கடி மனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க,
நெடு மொழி வைய' நக.

The curse of him who does not offer his life for his friend.

[பாட்டு 74 காண்க.]

[எழு: யான். (தொகை.) பயனி: செல்க. (வி. 85.) ஆர். (வி. 121.) செல்வுழி = செல் + வ் + உழி; இதில் வ் இடைநிலை. (வி. 153. 81.) நெடு-மொழி. (வி. 154.) நக. (வி. 140.)]

[நல்லோர் நட்பு இனிது; மற்றோர் நட்பு கைப்பு.]

81. ஆன் படு நெய் பெய் கலனுள் அது களைந்து,
வேம் படு நெய் பெய் தனைத்தரோ,—
தேம் படு
நல் வரை நாட! நயம் உணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

Forsaking the friendship of the discerning, and cultivating that of the silly, is like pouring Margosa oil into a vessel where ghee has been before.

[எழு: நட்பு (க்கொள்ளல்.) பயனி: அனைத்து. அரோ, அசைநிலை. படு. (வி. 153.) தேம் = தேன். (வி. 137. 93.) பெய்தனைத்து = பெய் தாற்போலும். (வி. 137. 93.) இதில் பெய்து = பெய்தால். நாட = நாடனே! (வி. 64.) ஒரீஇ = ஒருவி. (வி. 79.)]

82. உருவிற் கமைந்தான்கண் ஊராண்மை இன்மை
பருகற் கமைந்த பா னீர்அளா யற்றே.
தெரிவுடையார் தீயினத்தர் ஆகுத லாகம்
வரி பெடையோ டாடி விட் டற்று.

A specious outward appearance without a liberal spirit like milk and water.

[எழு: இன்மை, ஆகுதல். பயனி: அளாயற்று, விட்டற்று. அளாய் = அளாவி. அளாய், விட்டு, இவை அளாவினால், விட்டால் என்று பொருள் கொள்ளும். (வி. 117.) பானீர் = பாலிலேநீர். (வி. 152.)]

XV. பாடம்.

FRIENDSHIP.

நட்பு.

[நட்பின் அருமை.]

83. செயற்கரிய யாஉள நட்பின்; அதுபோல்
வினைக்கரிய யாஉள காப்பு?

Nothing harder than to gain a friend. No surer defence.

[நட்பின். (வி. 61. ஒப்பு.) உள. (வி. 125.) யா. (வி. 6.)]

[நல்லோர் நட்பு வளர்தலுந் தீயோர் நட்பு குறைதலும்.]

84. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

The friendship of the good increases; and *vice versa.*

[பிறைபோல் அறிவுடையவரது நட்புக்கள் நிறையுந்தன்மையின வாம்; நிறைந்த சந்திரன்போல் பின்னே நாடோறுங் குறையுந் தன் மையுடையனவாம் அறிவில்லாதவரது நட்புக்கள். நீர. (வி. 93.)]

85. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக் கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

Friendship not for jesting; but for serious reproofs.

[எழு: நட்டல். பயனி: அன்று, பொருட்டு. மிகுதிக்கண். (வி. 63.)]

[நட்பின் இயல்பு.]

86. முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

Mere complaisance not friendship; but real hearty affection.

[எழு: நட்பது, நட்பது. பயனி: அன்று, நட்பு. நெஞ்சத்து அகம் நக. (வி. 119. 140.)]

[நட்பின் செய்கை.]

87. உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

Friendship saves from distress as the hand keeps up the slipping garments.

[எழு: நட்பு. பயனி: ஆம்.]

[நட்பின் மாட்சிமை.]

88. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில்
கொட்பின்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

Real friendship an unswerving support.

[எழு: இருக்கை. பயனி: நிலை. நட்பிற்கு. (வி. 65.) இருக்கை. (வி. 94.) எனில். (வி. 86. (2.)) ஊன்றும் நிலை. (வி. 87. (3.))]

XVI. பாடம்.

CAUTION IN FORMING FRIENDSHIPS.

நட்பாராய்தல்.

[உடனே சிநேகம் பண்ணல்ஆகாது; பின்னே சிநேகிதனை விடக் கூடாது.]

89. நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

Rashness in forming connections. Not to be dissolved.

[எழு: கேடு, வீடு. பயனி: இல்லை, இல்லை.)]

[பாத்திரம் அறிந்து செய்யாத நட்பு தீதாய் முடியும்.]

90. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

Inconsiderate friendship brings ruin.

[எழு: கேண்மை. பயனி: தரும். கொள்ளாதான் = கொள்ளாதவன். சாம் = சாகும். (வி. 82. (7.))]

[வறுமையே சிநேகிதரை அளக்குங் கோல்.]

91. கேட்டினும் உண்டோர் உறுதி,—கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

Misfortune has this use, it is a rod to measure your friends.

[எழு: உறுதி, கேடு (தொகை.) பயனி: உண்டு, கோல் (ஆம்.) கேட்டினும். (வி. 61. 113.)]

[தீயோர் நட்பை விடுவது இலாபம்.]

92. ஊதியம் என்ப தொருவற்குப்
பேதையார் கேண்மை ஒரீஇ விடல்.

Gain to forsake the friendship of the foolish.

[எழு: விடல். பயனி: என்பது. ஒருவற்கு = ஒருவனுக்கு. (வி. 60. 35. 108.)]

[தீயோர் நட்பு.]

93. உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ,
கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

Pure thoughts. Friendship that brings no sorrow.

[எழு: நீ. (தொகை.) பயனி: உள்ளற்க! கொள்ளற்க! உள்ளற்க. (வி. 92.) சிறுகுவ. (வி. 81. 95.)]

[துன்பம் வந்தவேளையில் கைவிடுகிற சிநேகிதர்.]

94. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
அடுங்காலை உள்ளினும் உள்ளஞ் சுடும்.

The thought of faithless friends gives pain even in death.

[எழு: கேண்மை. பயனி: சுடும்.]

XVII. பாடம்.

THE FRIENDSHIP OF THE WICKED.

தீயோர் நட்பு.

[நல்லோர் நேசத்தை நாடலும் அல்லோர் நேசத்தைக் கைவிடலும்.]

95. மருவுக மாசற்றார் கேண்மை, ஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

The friendship of the pure, and of the inconsistent.

[எழு: நீ (தொகை.) பயனி: மருவுக, ஒருவுக. மருவுக. (வி. 85.) ஈத்தும் = ஈந்தும். (வி. 41. (1.) 141.) "*At any sacrifice.*"]

[தீயோர் நேசம் வளர்தலினுங் குறைதல் நன்று.]

96. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

Better that the friendship of those of bad dispositions should decrease than increase.

[எழு: கேண்மை. பயனி: இனிது. போலினும். (வி. 86. 142.)]

[தீயோர் சிநேகத்தில் பயனில்லை.]

97. உறின்நட் டறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

No benefit in the friendship of those who cling to one in prosperity and forsake one in adversity.

[எழு: பயன் (தொகை.) பயனி: என். உறின் நட்டு, அறின் ஒருவும். (வி. 86. (2.) 87.)]

[நயத்தை நாடி நேசிப்போர் கள்வருக்கு ஒப்பு.]

98. உறுவது சீர்தூக்கு நட்பும், பெறுவது
கொள்வாருங், கள்வரு நேர்.

Interested friends and thieves alike.

[எழு: நட்பு, கொள்வார், கள்வர். பயனி: நேர். (வி. 109.) உறுவது = நட்பால் வரும் பிரயோசனத்தை. (வி. 95. 152.)]

[பொய்யான சிநேகிதரினும் பகைவர் நல்லவர்.]

99. நகைவகையர் ஆகிய நட்பிற்

Ten times better enmity than mere sportive friendship. பகைவராற் பத்தடுத்த கோடி உறும்.

[எழு: கோடி. பயனி: உறும். நகைக்கேதுவாகிய நட்பில் வரும் இன்பங்களில் பகைவரால் வருந் துன்பங்கள் மிக நல்ல. பத்தடுத்த கோடி = பத்தாகத் தொடுத்த கோடி.]

[உதவி செய்யார் கேண்மை.]

100. ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை

Forsake without a word the friendship of those who will not make an effort for you. சொல்லாடார் சோர விடல்.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: சோரவிடல். உடற்றுபவர். (வி. 95.) சொல்லாடார் = சொல்லாதவராக. விடல். (வி. 85.)]

XVII. பாடம்.

INSINCERE FRIENDSHIP.

உண்மையற்ற நட்பு.

[மன உறுதியற்றவர் நட்பு தீது.]

101. கனவினும் இன்னாது, மன்னோ, வினைவேறு

Avoid the friendship of those whose words and deeds do not agree. சொல்வேறு பட்டார் தொடர்பு.

[எழு: தொடர்பு. பயனி: இன்னாது. கனவினும். (வி. 63. 113.)]

[உண்மையில்லாத நட்பர் தன்னைக் கெடுத்துவிடுவார்கள்.]

102. சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை

Faithless friends seek to betray. நேரா நிரந்தவர் நட்பு.

[எழு: நட்பு. பயனி: பட்டடை. நேரா. (வி. 90 = நேராமல்.)]

[தீயோர் நட்பு மாறிப்போகும்.]

103. இனம்போன் றினமல்லார் கேண்மை, மகளிர்
Fickle and feigning friends. மனம்போல வேறு படும்.

[எழு: கேண்மை. பயனி: வேறுபடும்.]

[கல்வி எளிது; மனத்தூய்மை அரிது.]

104. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
Natural enemies will not become one's friends. ஆகுதன் மாணார்க் கரிது.

[எழு: ஆகுதல். பயனி: அரிது. கடைத்தும்=இடத்தும். (வி.86.142.)]

[தீயோர் வணக்கங் கெடுதல்.]

105. சொல்வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க,
The bow bends to destroy: beware of feigned courtesy. வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான்.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: கொள்ளற்க. குறித்தமையான். (வி. 94. 59.)]

XIX. பாடம்.

BENEFITS.

நன்றி.

[நல்லோர்க்குச் செய்த நன்றியின் பயன் பின்னுகவாவது வரும்.]

106. நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல், என வேண்டா:
Seek not return of benefits.
The cocoanut tree.
நின்று
தளரா வளர்தெங்கு தான்உண்ட நீரைத்
தலையாலே தான்றரு தலால்.

[எழு: ஒருவர். (தொகை.) பயனி: வேண்டா. இது நேரிசைவெண்பா. (வி. 189.) கொல் எ–து அசைநிலை. (வி. 116.) தளரா = தளராமல். (வி. 90.) வளர். (வி. 153.)]

[நல்லோருக்குச் செய்த நன்றி நிலைநிற்கும்.]

107. நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கன்மேல் எழுத்துப் போற் காணுமே,
அல்லாத
ஈரம் இல்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்திற்கு நேர்.

Benefits conferred on the good, like engraving on stone; on others, writing on water.

[எழு: உபகாரம். பயனி: காணும், நேர் (ஆகும்.) கல் + மேல் = கன்மேல். (வி. 36.) எழுத்திற்கு = எழுத்து இன் + கு. (வி. 65.) நெஞ்சத்தார். (வி.66.93.123.) அல்லாத = ஒழிந்த. மற்றைய. (வி. 125.) நீர்மேல். (வி.63.) நேர். (வி. 131.)]

[தீயோருக்கு உபகாரஞ் செய்பவன் கெடுவான்; அவ்வுபகாரமுங் கெடும்.]

108. வேங்கை வரிப் புலிக்குத் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற் போற்,
பாங்கறியாப்
புல் லறி வாளர்க்குச் செய்த உபகாரங்
கல்லின் மேல் இட்ட கலம்.

The tiger that slew the physician.

[எழு: உபகாரம். பயனி: கலம். அதனுக்கு = அது + அன் + கு. (வி. 108.) வரி = வரிகளையுடைய. (வி. 154.) தீர்த்த = (நோயைத்)தீர்த்த. ஆனாற்போல். (வி. 109.) அறியா. (வி. 91.) கலம் = கலத்தைப்போல் ஆகும். (வி. 155. 131.)]

[உபகாரஞ் செய்யாதவர் செல்வம் உபகாரஞ் செய்பவருக்கு ஆகும்.]

109. பிறர்க்குதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும்;
பிறர்க்குதவி
செய்யாக் கருங் கடனீர் சென்று புயன் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

The wealth of the ungenerous is taken from them; the cloud takes from the sea to give to others.

[எழு: செல்வம், புயல். பயனி: ஆம், கொடுக்கும். பெய்யா. (வி. 86. (1.)) செய்யார், ஆக்குபவர், கடல், நீர். (வேற்றுமைத்தொகை. வி. 152.)

பெய்யா=பெய்து. (வி. 86. (1.)) பேறு. (வி. 96.) சென்று புயல் முகந்து பெய்யாக்கொடுக்கும் = புயலானது சென்று, மொண்டுகொண்டு பெய்து கொடுக்கும்.]

[நல்லோர் பிறர் துயரத்தைத் தமதாக எண்ணுவார்கள்.]

110. பேர்அறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே,
வீரமொடு காக்க விரைகுவார்;
நேர்இழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

The wise relieve the sorrows of their neighbours. The hand wards off the blow aimed at the body.

[எழு: அறிஞர், கை. பயனி: விரைகுவார், தாங்கும். வீரமொடு. (வி. 66. 27.) விரைகுவார். (வி. 81.) பேர். (வி. 121.) இழாய், இழைகளையுடையவளே! (வி. 64. 93.) அறிஞர். (வி. 95.) வீரமொடு. (வி. 66.) கோல் அடிதன்மேற்கைசென்று தாங்கும் = கையானது சென்று கோலினுடைய அடியைத் தன்மேல் படும்படியாகத் தாங்கிக்கொள்ளும்.]

XX. பாடம்.

GRATITUDE.

செய் நன்றி அறிதல்.

[நல்லோர் தமக்குச் செய்த உபகாரத்தை மதிப்பது.]

111. தினைஅனைத்தே ஆயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனைஅனைத்தா உள்ளுவர் சான்றோர்;
பனைஅனைத்
தென்றுஞ் செயினும், இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு.

Small benefits seem great to the wise; and vice versa.

[எழு: சான்றோர், நன்று. பயனி: உள்ளுவர், இல. இலங்கு, அருவி, நல், நாட. (வி. 153. 4. 7. 93. 64.) மாட்டு. (வி. 63.)]

[நல்லோர் தமக்குச் செய்த நன்மையை நினைப்பது; தீயோர் தம்மை நிந்தித்ததை நினைப்பது.]

112. மலை நலம் உள்ளுங் குறவன்; பயந்த
விளை நிலம் உள்ளும் உழவன்; சிறந்தொருவர்
செய்த நன் றுள்ளுவர் சான்றோர்; கயந் தன்னை
வைததை உள்ளி விடும்.

Each thinks upon his own favorite place. The good upon benefits conferred on them; the bad on injuries.

[எழு: குறவன், உழவன், சான்றோர், கயம். பயனி: உள்ளும், உள்ளுவர், உள்ளி விடும். உள்ளும். (வி. 137.) கயம் = கயவன். (வி. 162.) விடும். (வி. 124. (5.))]

[சான்றோரும் இழிவோரும் உபகாரத்தையும் அபகாரத்தையும் மதிப்பது.]

113. ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி எழுந்த
பிழை நூறுஞ் சான்றோர் பொறுப்பர்; கயவர்க்
கெழு நூறு நன்றி செய் தொன்றுதீ தாயின்,
எழு நூறுந் தீதாய் விடும்.

One benefit atones for a hundred injuries. The base forget seven hundred benefits when one injury is inflicted.

எழு: சான்றோர், எழுநூறு. பயனி: பொறுப்பர், விடும். தீதாய். (வி. 120.)]

[நன்றி அறிபவர்க்காகிய இலாபம்.]

114. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க; எறி திரை
சென்றுலாஞ் சேர்ப்ப! அது போல நீர் போயும்
ஒன்றிரண்டாம் வாணிகம் இல்.

Slight benefits had in eternal remembrance. No merchandise like this!

[எழு: அறிபவர், வாணிகம். பயனி: சூழ்க, இல். சூழ்க. (வி. 85.) உலாம். (வி. 87. (3.)) போயும். (வி. 141. 86. (1.))]

[நன்றி அறியாதவர்க்கு உறுந்தீமை.]

115. நாடி நமர் என்று நன்குபுறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழல்,—கிளர் மணி
நீடு கல் வெற்ப! நினைப்பின்றித் தாம் இருந்த
கோடு குறைத்து விடல்.

Ingratitude and treachery like cutting off the bough on which one stands.

[எழு: சூழல். பயனி: விடல். நன்கு. (வி. 120.) புறந்தந்தார்கு. (வி. 150.)]

XXI. பாடம்.

GRATITUDE.

செய்நன்றி அறிதல்.

[செய் நன்றியின் பெருமை.]

116. செய்யாமற் செய்த உதவிக்கு
வையகமும் வானகமு' மாற்றல் அரிது.

Spontaneous benefits.

[எழு: மாற்றல். பயனி: அரிது. வையகம், வானகம். (வி. 150.) அரிது. (வி. 93. அரு.)]

[ஏற்ற காலத்திற் செய்த நன்றி.]

117. காலத்தி னாற் செய்த நன்றி, சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

Timely benefits.

[எழு: நன்றி. பயனி: பெரிது. காலத்தினால். (வி. 137.) சிறிது, பெரிது. (வி. 93. சிறு, பெரு.) மாண. (வி. 120.) எனினும். (வி.142.)]

[பயன் நாடாமற் செய்த நன்றி.]

118. பயன் றூக்கார் செய்த உதவி,
நயன் றூக்கி னன்மை கடலிற் பெரிது.

Disinterested benefits.

[எழு: நன்மை. பயனி: பெரிது. பயன்றூக்கார். (வி. 38. 152.)]

[நல்லோர் நன்றியை மதித்தல்.]

119. தினைத்துணை நன்றி செயினும்,
Small benefits estimated as large ones. பனைத்துணையாக் கொளவர் பயன்றெரிவார்,

[எழு: பயன்றெரிவார். பயனி: கொள்வர். தினைத்துணை நன்றி. (வி. 162. 154.)]

[நன்றி செய்யப்பட்டவரால் அடையும் மேன்மை.]

120. உதவி வரைத்தன் றுதவி
Benefits conferred on the worthy take their value accordingly. உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து.

[எழு: உதவி. பயனி: வரைத்து. வரைத்து. (வி. 93.)]

[வறுமையில் உதவியவர் நட்பு மறக்கப்படாமை.]

121. மறவற்க மாசற்றார் கேண்மை!
Forget not the kindness of the pure! Forsake not the friendship of those who have befriended you in trouble! துறவற்க துன்பத்துட் டுப்பாயார் நட்பு!

[எழு: நீ (தொகை.) பயனி: மறவற்க! துறவற்க! மறவற்க, துறவற்க. (வி. 92.) துன்பத்துட்டுப்பாயார். (வி. 63. 66. 37.) துப்பாயார் = துப்பு ஆனவர்கள். (வி. 87. (1.) 95.)]

[மறவாதது இது; மறப்பது இது.]

122. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
Never forget benefits. Forget injuries at once. தன்றே மறப்பது நன்று.

[எழு: மறப்பது. பயனி: அன்று, நன்று. செயப்படு: நன்றியை, நன்றல்லதை. நன்றி. (வி. 96.)]

XXII பாடம்.

THE WISE.

அறிவுடையோர்.

[அறிவோர் வெட்டப்படும் மரத்திற்கு ஒப்பர்.]

123. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாம் அவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்;
மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்கும் ஆங், கண்டீர், மரம்.

The tree still shelters those who are cutting it down. The wise forgive and do good to those who inflict the cruelest injuries.

[எழு: அறிவுடையோர், மரம். பயனி: காப்பர், மறைக்கும். சாம் = சாகும். (வி. 87.) ஆம் = ஆகும். இடைக்குறை. (வி. 87. 41.) இடினும். (வி. 124. (5.) 142.)]

[தம்மைப் புகழாதவர்க்கு உதவி செய்வது.]

124. என்று' முகமன் இயம்பா தவர்கண்ணுஞ்
சென்று, பொருள்கொடுப்பார் தீதற்றோர்;
துன்று சுவை,—
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ,
நாவிற் குதவு' நயந்து?

The good confer benefits on those who do not continually flatter them. Does the hand serve the tongue for praise?

[எழு: தீதற்றோர், பூங்கை. பயனி: கொடுப்பார், உதவும். கண்ணும். (வி. 63. 113.) பூங்கை (பூ+கை.) (வி. 41. 121.) புகழவோ. (வி.140. 112.)]

தாரத்தி னன்று தனி.

Prose better than halting verse; good conduct than high birth; disease than cowardice; loneliness than a wife that fears not disgrace.

[மேன்மக்களின் இயல்பு.]

478. சான்றாண்மை, சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது,—
வான்றோயும்
மைதவழ் வெற்ப!—படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

These excellencies only found among the high-born.

[மேன்மக்களின் ஒழுக்கம்.]

479. இருக்கை எழலும், எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன,
குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார்; கயவரோ
டொன்றா உணரற்பாற் றன்று.

These courtesies and amenities only among respectable people.

[இருக்கை எழல் = இருக்கையை விட்டு எழுந்திருக்குதல். விடுப்ப ஒழிதல் = அவர்கள் அனுப்பிவிட்டால் உடனே போய் விடுதல்.]

LXXXII பாடம்.

THE EXCELLENT.

மேன்மக்கள்.

[கீழ்மக்கள்.]

480. கல்லாமை அச்சம், கயவர் தொழில் அச்சஞ்,
சொல்லாமை உள்ளும் ஓர் சோர்வச்சம்,
எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை அச்சம்; மரத்தார் இம்
மாணுக் குடிப்பிறந் தார்.

These various fears only among the really worthy.

[இம்மாணு = இவ்வகையான மாட்சிமையில்லாத.]

[மேன்மக்களின் இயல்பு.]

481. இன நன்மை, இன் சொல், ஒன் றீதல், மற் றேனை
மன நன்மை, என்றிவை எல்லாம்,
கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண் சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே உள.

These excellent things found among the noble.

[எழு: எல்லாம். பயனி: உள. மற்று, அசைநிலை.]

[மேன்மக்கள், கீழ்மக்கள்.]

482. செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்;
புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ஆற்றுதல் இன்று.

The mean even in prosperity do not do what the good effect even in adversity.

[எழு: சிறியவர். பயனி: செய்யார்.]

[மேன்மக்களின் செயல்.]

483. எற்றென்றும் இல்லா இடத்துங் குடிப் பிறந்தார்
அற்றுத் தற் சேர்ந்தார்க் கிசைவிடத் தூற்றுவர்;
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்.

The noble even in poverty afford aid to those who seek them.

[எழு: குடிப்பிறந்தார். பயனி: ஊற்றுவர்.]

[மேன்மக்களை நிலவுக்கொப்பிடல்.]

484. அங்கண் விசும்பின் அகணிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்;மற்
றிங்கண்
மறு வாற்றும்; சான்றோர்அஃ தாற்றார், தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

The moon and the noble differ in this: She endures her spots, they endure not any stain!

[மேன்மக்களின் செயல்.]

485. இசையும் எனினும், இசையா தெனினும்,
வசைதீர எண்ணுவர் சான்றோர்;
விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்?

Better miss a lion, than hit a jackal. Aim high!

[பிழைப்பு = பிழைக்க.]

LXXXIII பாடம்.

THE NOBLE AND THE MEAN.

பெரியோர்—சிறியோர்.

[பெரியோர் சிறப்பு.]

486. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

The greatness of those who live for both world.

[எழு: பெருமை. பயனி: பிறங்கிற்று. உலகு = உலகத்திலே. (வி. 152.)]

[பெரியோர் செயல்.]

487. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

The great achieve hard things; not so the mean.

[எழு: பெரியர், சிறியர். பயனி: செய்வார், செய்கலாதார். செய்கலாதார் = செயல் ஆகார் = செய்யமாட்டார்கள்.]

[பெரியோர் கல்வி.]

488. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

The veda speaks of the greatness of the men whose words are words of integrity.

[எழு: மறைமொழி. பயனி: காட்டிவிடும். செயப்படு: பெருமையை.]

[பெரியோர் ஒழுக்கம்.]

489. குணம் என்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

The wrath of those who have climbed the hill of virtue not to be withstood.

[எழு: காத்தல். பயனி: அரிது.]

[சிறியோர்.]

490. அச்சமே கீழ்களதாசாரம்,
எச்சம், அவா உண்டேல் உண்டாஞ் சிறிது.

Fear the guide of the base. For the rest, desire too may effect a little.

[எழு: அச்சம், சிறிது. பயனி: ஆசாரம், உண்டாம்.]

LXXXIV பாடம்.

LOVE.

அன்பு.

[அன்பின் சிறப்பு.]

491. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூச றரும்.

No bars can restrain love! The tears of the beloved cause a tempest in the soul.

[எழு: தாழ், கணீர். பயனி: உண்டோ, தரும். கணீர் = கண்ணீர். (வி. 41.) பூசறரும் = பூசல் தரும். (வி. 38.)]

[அன்பின் பயன்.]

492. அன்பிலார் எல்லாந் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

The unloving live all to themselves. The loving live wholly for others.

[எழு: இலார், உடையார். பயனி: உரியர், உரியர். என்பு = உடம்பால். (வி. 137.)]

[அன்பின் சிறப்பு.]

493. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

Love like the union of body and soul.

[எழு: அறிந்தோர் (தொகை.) பயனி: என்ப. அத்தொடர்ச்சியின் பயன் அன்பு; அல்லது, அத்தொடர்ச்சியைப்போலவே இருக்கும் அன்பு.]

[அன்பில்லாமையின் தீமை.]

494. என்பில் அதனை வெயிற்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

The lord of virtue will wither the unloving as the sun dries up insects.

[எழு: அறம். பயனி: காயும். என்பில் அதனை = என்பில்லாததை. அறம் = அறக்கடவுள். (வி. 162.)]

[இதுவுமது.]

495. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

Life without love is like a dead tree in hard, barren soil!

[எழு: வாழ்க்கை. பயனி: அற்று.]

[அன்பின் பெருமை.]

496. அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

That is a body where love resorts; all else, bones covered with skin.

[எழு: வழியது, உடம்பு. பயனி: உயிர்நிலை, போர்த்த. என்பு தோல் போர்த்த = எலும்பைத் தோலினால் போர்க்கப்பட்டவைகள்.]

LXXXV பாடம்.

BENEVOLENCE.

அருள்.

[எல்லா உயிர்களின்மேலுஞ் செல்வதாகிய கருணை.]

[அருளின் சிறப்பு.]

497. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்;
பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள.

This wealth is wealth. The rest is shared by the base.

[எழு: அருட்செல்வம், பொருட்செல்வம். பயனி: செல்வம், உள.

[அருளின் பயன்.]

498. அருள்சேர்ந்த நெஞ்சினாற் கில்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.

To the soul possessed by this, no entrance into the evil world of darkness.

[எழு: புகல். பயனி: இல்லை.]

[இதுவுமது.]

499. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

No fear-causing sins to him who walks in benevolence to all.

[எழு: பெரியோர் (தொகை.) பயனி: என்ப.]

[இதுவுமது.]

500. அல்லல் அருள்ஆள்வார்க் கில்லை, வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

No trouble to the benevolent. The fertile, vast, pendant globe round, which the tempests blow, is witness of this.

[எழு: அல்லல். பயனி: இல்லை.]

[அருளில்லாமையின் தீமை.]

501. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை,
பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லா கியாங்கு.

To the poor this world is not; so to the unkind that world is not.

[எழு: அவ்வுலகம். பயனி: இல்லை.]

[அருளாட்சிக்கு நியாயம்.]

502. வலியார்முற் றன்னை நினைக்க,தான் றன்னின்
மெலியார்மேற் செல்லும் இடத்து.

When a weaker one stands before you, think how you felt when you stood before one stronger than yourself.

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: நினைக்க. (வி. 85.)]

LXXXVI பாடம்.

KINDLINESS.

கண்ணோட்டம்.

[கண்ணோட்டத்தின் சிறப்பு.]

Benevolence causes the world's affairs to prosper; others a burden.

503. கண்ணோட்டத் துள்ள துலகியல், அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

[எழு: இயல், உண்மை. பயனி: உள்ளது, பொறை. நிலக்கு = நிலத்துக்கு. (வி. 41.) உண்மை = இருப்பது.]

[இதுவுமது.]

A tune without melody and eye without kindliness!

504. பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்? கண்ணென்னுங்
கண்ணோட்டம் இல்லாத கண்?

[எழு: பண், கண். பயனி: என்னும்?]

[கண்ணோட்ட மில்லாமையின் இழிவு.]

What is the eye without due kindness?

505. உளபோன் முகத்தெவன் செய்யும்
அளவினறற் கண்ணோட்டம் இல்லாத கண்?

[எழு: கண். பயனி: செய்யும்.]

[கண்ணோட்டத்தின் சிறப்பும், அதில்லாமையின் இழிவும்.]

Without it the eye only a wound.

506. கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம், அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

[எழு: கண்ணோட்டம், கண் (தொகை.) பயனி: அணிகலம், உணரப்படும்.]

[கண்ணோட்டமில்லாமையின் இழிவு.]

507. மண்ணோ டியைந்த மரத்தனையர்
The unkindly like trees. கண்ணோ டியைந்து கண் ணோடாதவர்.

[எழு: ஓடாதவர். பயனி: அனையர்.]

[கண்ணோட்டத்தின் பயன்.]

508. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
Those who know how to accomplish their purpose kindly are masters of the world. குரிமை உடைத்திவ் வுலகு.

[எழு: இவ்வுலகு. பயனி: உடைத்து.]

LXXXVII பாடம்.

CHILDREN.

புதல்வர்.

[நல்ல மக்களைப் பெறுதல்.]

[மக்களின் இனிமை.]

509. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
The rice fingered by one's children sweeter than ambrosia. சிறு கை அளாவிய கூழ்.

[எழு: கூழ். பயனி: இனிது.]

[இதுவுமது.]

510. மக்கண்மெய் தீண்டல் உடற்கின்ப மற்றவர்
The fondling them and hearing their words. சொற் கேட்டல் இன்பஞ் செவிக்கு.

[எழு: தீண்டல், கேட்டல். பயனி: இன்பம். மற்று, அசைநிலை.]

[மக்களில்லாதவரின் எண்ணம்.]

511. குழல் இனிதி யாழ் இனி தென்ப, தம் மக்கண்
The prattle of one's infants sweeter than the pipe and lute. மழலைச்சொற் கேளா தவர்

[எழு: கேளாதவர். பயனி: என்ப.]

[தந்தையின் கடன்.]

512. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

The father should make his son fit to shine in the assembly.

[எழு: செயல். பயனி: நன்றி. இருப்ப. (வி. 86.) (௲.)]

[மைந்தரின் பெருமை.]

513. தம்மிற் றம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

Pleasant to be excelled by one's son.

[எழு: உடைமை. பயனி: இனிது.]

[தாயின் உவகை.]

514. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

The mother's joy greater when her son is praised than when he was born.

[எழு: தாய். பயனி: உவக்கும்.]

LXXXVIII பாடம்.

GOVERNMENT.

அரசு.

[இறைவாங்கல்.]

515. குடி கொன் றிறை கொள்ளுங் கோமகற்குக் கற்று
மடி கொன்று பால் கொளலு' மாண்பே;
குடி ஓம்பிக்
கொள்ளும் ஆ கொள்வோர்க்குக் காண்டுமே மா நிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

The king who ruins his subjects by excessive taxation like the man who cuts off the udder to get the milk.

[ஆ = ஆறு, வகை.]

[அரச ஒழுக்கம்.]

516. இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருள்,
நின்று குறை இரப்ப நேர்படான்,
சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேட்லன் வேந்தும் அலன்.

These faults mark the wild robber, not the king.

[இதுவும் அது.]

517. முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி,
உடுப்ப உடுத்துண்ப உண்ணு,
இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கேளார், கண் விழியார்
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

These mark a breathing corpse.

[உண்ணு = உண்டு.]

[அரசினியல்பு.]

518. ஒற்றிற் றெரியா, சிறைப்புறத் தோர்தும் எனப்
பொற் றோ டிணையாத் தெரிதந்துங்
குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை, சென்று
முறை இடினுங் கேளாமை அன்று.

To inspect personally not trusting in spies, and knowing that it is hard to find out faults, is the duty of good governor.

[எழு: அஞ்சுவதே. பயனி: செங்கோன்மை. தெரிதந்தும் = தெரிந்தும். (வி. 124. (5.))]

[அரசன் கேள்வியை ஆராய்தல்.]

519. ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதோரீஇக் கொள்கை முதுக்குறைவு;
நேர்நின்று
காக்கை வெளிதேன்பார் என் சொலார்? தாய்க் கொலை
சால்புடைத் தேன்பாரும் உண்டு.

To investigate rigidly himself is his duty; for there are shameless liars in the world.

[எழு: கொள்கை, என்பார், என்பாரும். பயனி: முதுக்குறைவு, சொலார், உண்டு.]

[இறையிடுதல்.]

520. முறை தெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கும்
இறை திரியா நேர் ஒக்கல் வேண்டும்;
முறை திரிந்து
நேர் ஒழுகான் ஆயின் அதுவாம் ஒருபக்க
நீர் ஒழுகிப் பால் ஒழுகும் ஆறு.

Impartiality.

[அதுவாம் ஆறு = அது அந்த ஆறாக ஆகும்.]

LXXXIX பாடம்.

JUST AND UNJUST GOVERNMENT.

செங்கோன்மை; கொடுங்கோன்மை.

[அரசனாலே செயப்படும் முறையினது தன்மை.]

[செங்கோன்மை மாட்சி.]

521. குடி தழீஇக் கோல் ஓச்சு மா நில மன்னன்
அடி தழீஇ நிற்கும் உலகு.

The world at the feet of the king who loves his people.

[எழு: உலகு. பயனி: நிற்கும். தழீஇ. (வி. 79. 86.)]

[செங்கோல் செலுத்தியவன் அடையும் பயன்.]

522. இறை காக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறை காக்கு முட்டாச் செயின்.

The king guards the earth. His justice guards him.

[எழு: இறை, முறை. பயனி: காக்கும்.]

[கொடுங்கோன்மையின் தீமை.]

523. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும்.

The country suffers if the king does not daily administer justice.

[எழு: நாடு. பயனி: கெடும். "மன்னவனது நாடு நாடொறுங் கெடும்."]

[கொடுங்கோன்மையான் அடையுங் குற்றம்.]

524. சூழுங் குடியும் ஒருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

The unthinking king will lose treasure and people.

[எழு: அரசு. பயனி: இழக்கும். (வி. 137.)]

[இதுவுமது.]

525. அல்லற்பட் டாற்று தழுதகண்ணீர், அன்றே,
செல்வத்தைத் தேய்க்கும் படை.

The tears of the suffering people, an axe to cut down the tree of his prosperity.

[எழு: கண்ணீர். பயனி: படை. (வி. 205.)]

[செங்கோன்மை, கொடுங்கோன்மை.]

526. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னுவா மன்னர்க் கொளி.

Justice confirms a kingdom; without this its glory grows dim.

[எழு: மன்னுதல், ஒளி. பயனி: செங்கோன்மை (யால் ஆகும்), மன்னுவாம்.]

XC பாடம்.

IMPARTIALITY.

நடுவு நிலைமை.

[எல்லாரிடத்தும் அறத்தின் வழுவாமல் ஒப்ப நிற்கும் நிலைமை.]

[நடுவு நிலைமையின் சிறப்பு.]

527. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

The wealth of the just undiminished endures to his offspring.

[எழு: ஆக்கம். பயனி: உடைத்து.]

[நடுவு நிலைமை கடந்த செல்வம்.]

528. நன்றே தரினு நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்!

Forsake at once the gain of injustice!

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: விடல். நன்றே = தீங்கன்றி நன்மையே. விடல். (வி. 85.)]

[நடுவு நிலைமையின் சிறப்பு.]

529. கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

Reverses of fortune will happen. Unswerving justice is the ornament.

[எழு: கேடு, பெருக்கம், கோடாமை. பயனி: அல்ல, அணி.]

[நடுவு நிலைமையில்லாமையின் தீமை.]

530. கெடுவல்யான் என்ப தறிக, தன் னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

Let the unjust hear the inner voice saying, "I deserve to perish."

[எழு: ஒருவன் (தொகை.) பயனி: அறிக. கெடுவல் = கெடுவேன். (வி. 83.) ஒருவன் தனது மனம் நடுவு நிலைமையை விட்டு நீங்கினால் அந் நினைவு "கெடுவல் யான்," என்று சொன்னதாக அறியக்கடவான்.]

[வார்த்தையில் நடுவு நிலைமை.]

531. சொற் கோட்டம் இல்லது செப்பம், ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

Unswerving words of justice, from a heart unbiassed.

[எழு: இல்லது. பயனி: செப்பம்.]

[வாணிகத்தில் நடுவு நிலைமை.]

532. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம், பேணிப்
பிறவுந் தம்போற் செயின்.

Merchants to guard others' goods as their own.

[எழு: அச்செய்கை (தொகை.) பயனி: வாணிகம்.]

XCI பாடம்.

VARIOUS PRECEPTS.

பன்னெறி.

[பலவழி.]

[வெளிருபம்.]

533. மடல்பெரிது தாழை, மகிழினிது கந்தம்;
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா:
கடல் பெரிது,
மண்ணீரும் ஆகா ததன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

The thorn leaf large. The magir flower more fragrant. The sea large, the little fountain's waters sweet.

[தாழை, மகிழ். (வி. 152.) விடும். எ-து துணைவினை. (வி. 124.) மண்ணீர், உண்ணீர். (வி. 153.) சிற்றூறல். (வி. 121.)]

[அவரவரைத் தந்தம் வலிமையால் அறியவேண்டும்.]

534. உருவுகண் டெள்ளாமை வேண்டும்,—
உருள்பெருந்தேர்க் கச்சாணி அன்னார் உடைத்து.

Regard not appearances. The lynchpin.

[எழு: எள்ளாமை, உலகம் (தொகை.) பயனி: வேண்டும், உடைத்து. உருள். (வி. 153.]

[இதுவுமது.]

535. பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனான் முளையாதாம்:
The corn deprived of its husk will not do for seed.
கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

[யாதொரு தொழிலையும் முடியுங்காலத்தை அறிந்து தொடங்கல் வேண்டும்.]

536. அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா;
A proper season must be selected.
தொடுத்த
உருவத்தா னீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

[உருவத்தால். (வி. 137*. 66.) உருவத்தானீண்ட. (வி.39.) பழா. (வி. 89.)]

[இதுவுமது.]

537. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை: இகல்வெல்லும்
The owl victorious by night is vanquished by the crow in the day.
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

[எழு: காக்கை, பொழுது. பயனி: வெல்லும், வேண்டும். பகல் = பகலில். (வி. 152.)]

[காலத்தை அறிதலினால் உறுபயன்.]

538. பருவத்தோ டொட்ட ஒழுக திருவினைத்
The seizing opportunity the way to gain fortune.
தீராமை யார்க்குங் கயிறு.

[எழு: ஒழுகல். பயனி: கயிறு.]

XCII பாடம்.

ACTING WITH REGARD TO TIME AND PLACE.

காலத்தையும் இடத்தையும் அறிதல்.

[காலங்கருவி அறிந்து செய்தலினால் உறுபயன்.]

539. அருவினை என்ப உளவோ,
கருவியாற் காலம் அறிந்து செயின்?

Nothing hard when you have suitable instruments and a fitting time.

[எழு: என்ப. பயனி: உளவோ? என்ப = என்னப்பட்டவை.]

[இதுவுமது.]

540. ஞாலங் கருதினுங் கைகூடுங்,
காலங் கருதி இடத்தாற் செயின்.

You may grasp the world if you take heed to time and place.

[எழு: அது. பயனி: கைகூடும்.]

[ஊக்கம்.]

541. ஊக்கம் உடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

The reserve of the mighty is like the ram's receding before it rushes on its antagonist.

[எழு: ஒடுக்கம். பயனி: தகைத்து. (வி. 204.)]

[இடபேதம்.]

542. நெடும்புனலுள் வெல்லு' முதலை;
அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற.

The alligator victorious in water; slain by others if it leave it.

[எழு: முதலை, பிற. பயனி: வெல்லும், அடும். (நன்னூல். 457.)]

[இதுவுமது.]

543. கடல்ஓடா கால்வ னெடுந்தேர்; கடலோடு'
நாவாயும் ஓடா நிலத்து.

The chariot not adapted for the sea, nor the boat for land.

[எழு: தேர், நாவாய். பயனி: ஓடா. கால்வனெடுந்தேர்=வலிமை பொருந்திய உருளைகளை உடைய தேர்.],

[இதுவுமது.]

544. கால்ஆழ் களரி னரி அடுங், கண்ணஞ்சா
A jackall may slay an elephant in the deep mire.
வேலாண் முகத்த களிறு.

[எழு: நரி. பயனி: அடும். செயப்படு: களிறை. வேலான் முகத்த = வேலையுடைய ஆட்களைக்கோத்த கொம்பையுடைய. முகம் = கொம்பு. (வி. 162.)]

XCIII பாடம்.

HOUSE-WIFE.

மனைவி.

[மனைவியின் செல்வம்.]

545. இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை;
இல்லாளும் இல்லாளே ஆம் ஆயின்,
இல்லாள்
Every thing is right when the wife is what she ought to be.
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல், அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

[இல்லாள். (வி. 93.) உரைக்கும் = உரைப்பாள். (வி. 137.)]

[நாணமுடைய மனைவி.]

546. உள்ளத் துணர்வுடையான் ஓதிய நூல்அற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்
தெள்ளிய
A modest wife like a javelin in the hand of a hero.
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

[கணவனும் மனையாளும் ஒருமித்தல்.]

547. காதன் மனையாளுங் காதலனு' மாறின்றித்
தீதில் ஒரு கருமஞ் செய்பவே!—
ஓது கலை
எண்ணிரண்டும் ஒன்று மதி என் முகத்தாய்!—நோக்கருன்
கண்ணிரண்டும் ஒன்றையே, காண்!

The husband and wife should agree in all things: two eyes see the same object.

[எண்ணிரண்டு = பதினாறு. (வி. 159.) நோக்கருன் = நோக்கல் தான்.

[கெட்ட மனையாள்.]

548. எறி என் றெதிர் நிற்பாள் கூற்றம்; சிறு காலை
அட்டில் புகாதாள் அரும் பிணி;
அட்டதனை
உண்டி உதவாதாள் இல் வாழ் பேய்; இம் மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

The evil qualities of a bad wife and the evil effects of them.

[நல்ல மனையாள்.]

549. குட நீர் அட் டுண்ணும் இடுக்கட் பொழுதுங்
கடனீர் அற உண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கை ஆறுக் கொள்ளு' மட மொழி
மாதர் மனை மாட்சி யாள்.

A true wife: cooks with one vessel of water in time of poverty. If friends come, ready to drink up the sea, she performs her duties with kindness of speech.

[எழு: மாதர். பயனி: மாட்சியாள்.]

[இல் வாழ்க்கை.]

550. மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பின் அல்லால்
ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான் சகடஞ்
செல்லாது தேற்றித்து நின்று.

Two wheels of one chariot: husband and wife uniting in affection.

[எழு: சகடம். பயனி: செல்லாது.]

XCIV பாடம்.

HOUSE-WIFE.

மனைவி.

[இல் வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மை.]

[மனையாளியல்பு.]

551. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

The dignity of the mistress. Arrangements suited to income.

[எழு: வாழ்க்கையுடையவள். பயனி: துணை. வளத்தக்காள் வாழ்க்கை = வரவுக்குத்தகுந்த வாழ்க்கையை உடையவள்.]

[மனையாள் மாட்சி.]

552. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
மனைமாட்சித் தாயினும் இல்.

If the wife has no dignity all is ruined.

[எழு: வாழ்க்கை. பயனி: இல். (வி. 63.)]

[இதுவுமது.]

553. இல்லதென் இல்லவள் மாண்பானல்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

Nothing lacking if she be worthy; and vice versa.

[எழு: இல்லவள். பயனி: இல்லதென், உள்ளதென்? (வி. 143.)]

[மனையாள் இயல்பு.]

554. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

With industry she guards herself, cares for her husband, and preserves the good name of both.

[எழு: சோர்விலாள். பயனி: பெண். தற் = தன்னை, தன்னுடைய.]

[புகழைக் காப்பாற்றாத இடத்து உண்டாகுங் குற்றம்.]

555. புகழ் புரிந் தில்லிலோர்க் கில்லை,
இகழ்வார் முன் னேறு போற் பீடு நடை.

He only is bold whose wife has a good reputation.

[எழு: நடை. பயனி: இல்லை. இல் = இல்லாள். (வி. 162.)]

[மனையாள் தன்னைக்காத்தலினது சிறப்பு.]

556. சிறை காக்குங் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை.

Virtue the only safeguard.

[எழு: காப்பு, காப்பே. பயனி: செய்யும், தலை.]

XCV பாடம்.

KINDLY SPEECH.

இன்சொல்.

[இன்சொலின் பயன்.]

557. இன்சொலால் அன்றி இருநீர் வியன் உலகம்
வன் சொலால் என்று மகிழாதே;—
பொன்செய்
தகிர் வளையாய்!—பொங்கா தழற் கதிராற் றண்ணென்
கதிர் வரவாற் பொங்குங் கடல்.

Soft words better than harsh. The sea is attracted by the cool moon and not by the hot sun.

[நீர்வியன் உலகம் = கடல் சூழ்ந்த பெரிய பூமி. (வி. 157.) செய்து = செய்யப்பட்டு. (வி. 137.) வளையாய். (வி. 93.) அழற்கதிர். (வி. 119.) தண்ணென் கதிர். (வி. 114.) என் என்னும் வினைப்பகுதி உவமைப் பொருளிலே வந்தது. (வி. 153.)]

[இதுவுமது.]

558. வெட்டெனவு மெத்தெனவை வெல்லாதாம்; வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது;
நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

Harshness does not overcome mildness. The dart pierces an elephant, but not (a bag of) cotton. The rock that yields not to the iron bar yields to the root of a tree.

———

[இன்சொல் இன்னது.]

559. இனியவர் என்சொலினும் இன்சொலே; இன்னார்
கனியு' மொழியுங் கடுவே,
அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு' நோய் தீர்க்கும், மெய் பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்.

Whatever the kindly say must be sweet. The kind words of the unkindly are poison. Borax and arsenic.

———

[இன்சொலின் பயன்.]

560. புன்சொல்லு' நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

Foolish speech injures. Kindly speech never.

———

[இதுவுமது.]

561. அல்லவை தேய, அறம் பெருகு
நல்லவை நாடி இனிய சொலின்.

Kind words with good intent.

[எழு: அறம்: பயனி: பெருகும்.]

[இன்சொலின் நன்மை.]

562. இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந் தற்று.

Speaking unkindly when you might speak otherwise, like preferring unripe to ripe fruit.

[எழு: கூறல். பயனி: அற்று.]

XCVI பாடம்.

DIVINE PROVIDENCE.

தெய்வச் செயல்.

[மனிதரின் முயற்சி.]

563. பரபரப்பி ைேடு பலபல செய்தாங்
கிரவு பகற் பாழுக் கிறைப்ப;
ஒரு ஆற்ருல்
நல்லாற்றின் ஊக்கிற் பதறிக் குலை குலைப:
எவ்வாற்ருன் உய்வார் இவர்?

Foolish impetuosity and haste.

[கடவுளின் விதி.]

564. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன போ என்ருற் போகா;
இருந்தேங்கி
நெஞ்சம் புண் ணுக நெடுந் தூரந் தா நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

Things not appointed will not come. Things appointed will come, yet men mourn and pine.

[இதுவுமது.]

565. ஈட்டும் பொருண் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும் படி அன்றிக் கூடாவாந்;
தேட்ட
மரியாதை, காணு, மகிதலத்தீர்! கேண்மின்!
தரியாது, காணுந், தனம்.

Only as far as the will of God permits will efforts to become rich be successful. Honour is real acquisition! Wealth endures not.

[நாஸ்திகம்.]

566. தெய்வம் உளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்குந்;
தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சோல்வார் பயன்?

God punishes those who acknowledge Him when they go astray—and not others. Men correct their own dear sons.

[ஆஸ்திகம்.]

567. மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறை அறைந்தாங் கோடிப் பரக்கும்; கழி முடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து.

Evil done in secret will be proclaimed by God. The stench of carrion can't be concealed.

XCVII பாடம்.

AGRICULTURE.

உழவு.

[வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரித்தாகிய உழுதற்றொழில்.]

[உழவின் மேன்மை.]

568. ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும், விழும், அன்றே?
ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை; கண்டீர்,
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

Nothing like agriculture. A tree by the stream may die. Royal favour may fail.

[எழு: மரம், வாழ்வு, ஒப்பு, பழுது. பயனி: விழும், இல்லை, உண்டு. (வி. 108. 133.)]

[உழவினது சிறப்பு.]

569. சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.

The world may vacillate, but agriculture is the best.

[எழு: உலகம், தலை. பயனி: பின்னது, உழவே. (வி. 141.) ஏர், ஆகுபெயர். (வி. 162.)]

[உழவு தொழிலைச் செய்வாரது சிறப்பு.]

570. உழுவார் உலகத்தார்க் காணி,அஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து.

The ploughman is the lynch-pin of society.

[எழு: உழுவார். பயனி: ஆணி. (வி. 205.)]

[இதுவுமது.]

571. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

The agriculturist alone independant.

[எழு: உழுதுண்டு வாழ்வார், எல்லாம். பயனி: வாழ்வார், செல்பவர்.]

[இதுவுமது.]

572. பல குடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பார்
அலகுடை நீழ லவர்.

The possessors of grain will reign over the rulers.

[எழு: நீழலவர். பயனி: காண்பார். செயப்படு: நீழலை. (வி. 41. 63. 62.)]

[உழவு தொழிலைச் செய்யும் விதம்.]

573. செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்.

Constant attention required, or the earth will sulk like a neglected wife.

[எழு: நிலம். பயனி: விடும். செல்லான் = செல்லாதவனாகி. இல்லாளின் = இல்லாளைப்போல. (வி. 61.)]

XCVII பாடம்.

THE BIRTH OF THE REDEEMER.

அருணாதன் திரு அவதாரஞ் செய்து பாலகனாகித் தூங்குங் காலத்தில் ஓர் முனிவன் பாடியது.

574. இருளே அணுகா, மறைவ'ணுகா, இரவிக் கொ'ளியாந் திருவிழியை
மருளே அணுகா மூடுகின்றான்; வானு' மண்ணும் வழுவாதான்
அருளே மருளா இவ்வுலகிற் 'கயர்வுஞ் ஆற அயர்'வில்லான்
தெருளே மருளா மனந் துயிலாத் தினை நான் களிப்பத் துயில்கின்றான்.

He sleeps, who never slumbers!

[எழு: வழுவாதான், அயர்வில்லான். பயனி: மூடுகின்றான், துயில்கின்றான். அணுகா. (வி. 156.)]

575. களித்த நாளில் அரும்புந்தென் காலே இனிதீங் 'கரும் புதியே!
துளித்த நானத் தேன்அரும்பத் துணர்நாண் மலர்காள், அரும்புதிரே!
விளித்த நாகு மாங்குயில்காள், வினைதேன் பாவை அரும்புதிரே!
அளித்த நாதன் நான் கனிய அன்பு துயிலாத் துயில்கின்றான்.

[அரும்புதி. (வி. 84.) துணர் நாண் மலர் காள். (வி. 157. 36. 64.)]

576. கண்பட் 'டுறங்கக் கண்டேனோ? கருணா கரனே, களிக்கடலே!
புண்பட் 'டுளையு' நெஞ்சிற்'கோர் பொருவா மருந்தே, அருள் அன்பே,
மண்பட் 'டலையுங் கடல்அன்ன மருள்என் னெஞ்சிற் 'குயிர்நிலையே!
எண்பட் 'டுயர்ந்த செல்வரசே, எம்மேல் இரங்குந் தயை இதுவோ!

[களிக்கடலே. (வி. 154.) செல்வு = செல்வம். (வி. 117.) அன்ன. (வி. 109.) மருள். (வி. 163.)]

577. வான்றேய் நயங்கள் பயந்தோய்நீ! மண்டோய் துயர்நீத் தளித்தோய் நீ!
தேன்றேய் இன்பத் தமைந்தோய்நீ! சேண்மேற் புகழப் படுவோய் நீ!
நான்றேய் உணர்வின் உயர்ந்தோய்நீ! நான் என் றுக அவதரித்தே
ஊன்றேய் உடல்கொண் டனஅன்பின் உணர்விட் டெனக்குப் பணியாயோ?

[வான்றேய், மண்டோய். (வி. 38. 37.) கொண்டன அன்பின் = கொண்டு, அன்ன அன்பின். (வி. 41.)]

---

578. கோவீற் றிருந்து மகிழ்வோய்நீ! குலையா வயத் தொப் பிகழ்ந்தோய் நீ!
நாவீற் றிருந்த புகழ்மிக்க நணுகாக் காட்சிக் கிறையோய் நீ!
பூவீற் றிருந்து நாம்வாழப் பூ வந் திடர்உற் றழுவோய் நீ!
ஆவீற் றிராயோ, என்னிதயத் ததற்கே உறுதி புரியாயோ?

[கோ = வானத்தில். (வி. 152.) வயத்து, இதயத்து, என்பவற்றில் அம் கெடவும் அத்துச்சாரியை தோன்றவும் வேற்றுமையின் உருபு தொக்கது. (வி. 66.) ஒத்துக்காண்க. இறையோய். (வி. 93.)]

---

579. நூல்வாய்ப் புகழ்மேல் உயர்ந்தோய் நீ! நோய்வாய் மருந்திற் கனிவோய் நீ!
கோல்வாய் கோடா நீதிநெறி கொண்டெவ் வுலகும் புரந்தோய் நீ!
வேல்வாய்க் குருதி பாய்ந்திறப்ப மெய்கொண் டாயோ? இதை அறியாக்
கால்வாய் இலைபோ றியங்கிய என் கருத்திற் குணர்வை உணர்த்தாயோ?

[வாய். (வி. 36. 61. 156.) இறப்ப. (வி. 86.) போறியங்கிய = போல்+ தியங்கிய. (வி. 38.)]

---

580. நீர்பாய் உலகிற் குயிரோய் நீ! நிமிர்வீட் டுலகிற் குயிரோய் நீ!
சீர்பாய் பாவிற் குறையோய் நீ! திறன்கொண் டாள்வாய்க் கடலோய் நீ!
ஏர்பாய் இரவிக் கொளியோய் நீ! எம்மேல் இரங்கிப் பிறந்தனை, நாஞ்
சூர்பாய் துகள்அற் றுய்வதற்குன் றுணைத்தா டொழும்பண் புரையாயோ?

[வீட்டுலகிற்கு. (வி. 35. 65. 119.) உலகு = உலகத்தார். (வி. 162.)]

581. தேறுந் தயையின் முனிவோய் நீ! சினத்திற் கருள்செய் கனிவோய் நீ!
கூறுங் கலையற் றுணர்வோய் நீ! கூறுந் தொனியற் றுரைப்போய் நீ!
மாறும் பொருள் யா விலு' நின்றே மாறு நிலைகொள் மரபோய் நீ!
இறுந் தவிர்ந்துன் புகழ்க்கடல்ஆழ்ந் தெனக்கே கரை காட்டருளாயோ?

[காட்டருளாயோ=காட்டி அருளாயோ. இதுசெய்யுள்விகாரம். (வி. 41.) அற்று (வி. 1. 86.)]

582. ஒளிநாக் கொடுவான் சுடர்புகழ, ஒளிநாக் கொடு பன் மணிபுகழ,
களி நாக் கொடு பற் புள் புகழக், கமழ்நாக் கொடு கா மலர்புகழ,
Praise from all the creation.
தெளிநாக் கொடு நீர்ப் புனல் புகழ, தினமே புகழப் படுவோய் நீ!
அளிநாக் கொடுநான் உனைப்புகழ அறியா மூகை உணர்த்தாயோ?

[கொடு = கொண்டு. (வி. 41.) ஒளி நாக்கு முதலியவும் பண்புத் தொகை. (வி. 154.)]

583. என்றும் போற்றப் படுவோய் நீ! எங்கு' நிழற்றோர் குடையோய் நீ!
Eternal king! Help me worthily to sing thy praise!
முன்றுன் பொழுதற் றுளனேய் நீ! முக்கா லத்தோர் பொழுதோய்நீ!
குன்றுந் தன்மைத் துரை பின்றக் குனியா அருள் செய்தாய்; அதற்கே
ஒன்றுந் தேறு என்னிதயத் துணர்வின் காட்சி அளியாயோ?

[நிழற்று. (வி. 93.) முன்றுன் = முன் + துன். (வி. 38. 153.)]

XCIX பாடம்.

THE COUNTRY OF KÔSALA.

கோசல நாடு.

[முதல்நூல் செய்தவர்.]

584. வாங்கரும் பாத' நான்கும் வகுத்த வான் மீகி என்பான்
Kamban's modest commencement of his poem. தீங் கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்;
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனு' நறவ' மாந்தி,
மூங்கையான் பேசல் உற்றான் என்ன யான் மொழியல் உற்றேன்.

[எழு: வான்மீகி, யான். பயனி: செய்தான். உற்றேன்.]

[வயல் வளம்.]

585. வரம்பெலா' முத்தந் தத்து'; மடைஎலாம் பணிலம்; மாநீர்க்
The riches of the paddy fields. குரம்பெலாஞ் செம்பொன்; மேதிக் குழி எலாங் கழு நீர்க்கொள்ளை;
பரம்பெலாம் பவளம்; சாலிப் பரப்பெலாம் அன்னம்; பாங்கர்க்
கரம்பெலாஞ் செந்தேன்; சந்தக் காஎலாங் களிவண் டீட்டம்.

[பலவித ஒலி.]

586. ஆறு பாய் அரவம், மள்ளர் ஆலை பாய் அமலை; ஆலைச்
சாறு பாய் ஓசை; வேலைச் சங்கு வாய் பொங்கும் ஓதை,
Various sounds heard in the fields. ஏறு பாய் தமரம், நீரில் எருமை பாய் துழனி; இன்ன
மாறு மா றுகித் தம்மின் மயங்கும் ஆ' மருத வேலி,

[மருதநிலம் இராசாத்திக்கு ஒப்பிடல்.]

587. தண் டலை மயில்கள் ஆடத், தாமரை விளக்கந் தாங்க
The cultivated land a queen! All nature waiting in her court. கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்டிரை எழினி காட்ட, தேம் பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற் றிருக்கு', மாதோ!

[இன்னது இன்ன இடத்தில் துயிலும் எனல்.]

588. நீரிடை உறங்குஞ் சங்கம்; நிழலிடை உறங்கு' மேதி,
தாரிடை உறங்கும் வண்டு; தாமரை உறங்குஞ் செய்யாள்;
தூரிடை உறங்கும் ஆமை; துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்; பொழிலிடை உறங்குந் தோகை.

These and these sleep in such and such places.

(வி. 63.)

[இன்னது இன்ன இடத்தில் ஒளி விடும் எனல்.]

589. படை உழ வெழுந்த பொன்னும், பணிலங்கள் உயிர்த்த முத்தும்,
இடறிய பரம்பிற் காந்தும் இன'மணித் தொகையு' நெல்லும்,
மிடை பசுங் கதிரு' மீனு' மென்றழைக் கரும்பும் வண்டுங்
கடைசியர் முகமும் போதுங் கண் மலர்ந் தொளிரு'மாதோ!

These and these gleam here and there!

[தேன் பொழிவு.]

590. ஆலை வாய்க் கரும்பின் றேனும் அரி தலைப் பாளைத் தேனும்,
சோலை வீழ் கனியின் றேனும், தொடை இழி இறாலின் றேனும்
மாலை வாய் உகுத்த தேனும், வரம்பிகந் தோடி, வங்க
வேலை வாய் மடுப்ப உண்டு மீன் எலாங் களிக்கு', மாதோ!

Honey flows in the channels of that land.

[வாசனைப் பண்டத்து மிகுதி.]

591. வெண்டளக் கலவைச் சேறுங், குங்கும விரைமென் சாந்தும்,
குண்டலக் கோல மைந்தர் குடைந்தநீர்க் கொள்ளைச் சாற்றிற்
றண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந் தழீஇய வைப்பும்
வண்டல் இட்டோடு மண்ணு'மதுகர'மொய்க்கு' மாதோ!

Odoriferous pastes.

[பண்ணை.]

592. சேல் உண்ட ஒண்கணாரிற் றிரிகின்ற செங்கால் அன்னம்
The cultivation. மால் உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
The frogs soothe with their chorus. கால் உண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும், பண்ணை.

[எழு: பண்ணை. பயனி: தன்மையது (தொகை.)]

C பாடம்.

MAXIMS.

நீதி மொழி.

[அது அது ஆதல்.]

593. மெய் வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள் தம்மைப்
Definitions of wisdom, perception, and good conduct. The result of these. பொய் வகை இன்றித் தேறல் காட்சி; ஐம் பொறியும் வாட்டி
உய் வகை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போதே இரு வினை கழியும் என்றான்.

[கல்விப் பெருமை.]

594. கைப்பொருள் கொடுத்துங் கற்றல்! கற்ற பின் கண்ணும் ஆகும்;
மெய்ப் பொருள் விளக்கும்; நெஞ்சின் மெலிவிற்கோர் துணையும் ஆகும்;
The value of learning. பொய்ப் பொருள் பிறகள்; பொன் ஆம்; துணைவி ஆம்; புகழும் ஆக்கும்;
இப்பொருள் எய்தி நின்றீர், இரங்குவ தென்னை? என்றான்.

[கற்றல். (வி. 85.)]

[தீமையின் விளைவு.]

595. பேதமை என்னும் வித்தில் பிறந்து, பின் வினைகள் என்னும்
வேதனை மரங்கள் நாறி, வேட்கைவேர் வீழ்த்து, முற்றிக்,
The tree of evil. காதலும் களிப்பும் என்னும் கவடுவிட் டவலம் பூத்து,
மாதுயர் இடும்பை காய்த்து, மரணமே கனிந்து நிற்கும்.

[எழு: மரங்கள். பயனி: நிற்கும்.]

[நட்பாராய்தல்.]

596. தொழுத தம் கையின் உள்ளுந், துறு’முடி அகத்துஞ் சோர
அழுத கண் ணீரின் உள்ளும், அணிகலத் தகத்தும், ஆய்ந்து
பழுது கண் அரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும்; பற்று
தொழிக!யார் கண்ணுந் தேற்றந் தேளிகுற்றார் விளிகுற் றாரே.

The weapon concealed in the hands that offer salutation.

[எழு: பகைவர் (தொகை), தெளிகுற்றார். பயனி: ஒடுங்கும், விளிகுற்றார்.]

[அரசருக்கு உரிய உபாயங்கள்.]

597. ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்,
கற்ற மாந்தரைக் கண் எனக் கோடலும்,
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும், சூதரோ
கொற்றங் கொள் குறிக் கொற்றவர்க் கென்பவே.

These three the real policy (சூது) of victorious kings.

[அரோ, அசைநிலை.]

[பொருளின் பயன்.]

598. வென்றி ஆக்கலும், மேதக வாக்கலும்,
அன்றி யுங் கல்வி யோட்ழ காக்கலும்,
குன்றி னார் தமைக் குன்றென ஆக்கலும்,
பொன்றுஞ் சாகத்தி னய்!பொருள் செய்யுமே.

Gain wealth, which confers these benefits.

[பொன், துஞ்சும், ஆகத்தையுடையவளே!]

[ஒன்றினால் ஒன்றாகுதல்.]

599. பொன்னின் ஆகும் பொருபடை; அப்படை
தன்னின் ஆகும் தரணி; தரணியில்
பின்னை ஆகும் பெரும்பொருள்; அப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே.

One thing results from another.

CI பாடம்.

DAMAYANTI'S LAMENT.

தமயந்தி புலம்பல்.

600. கான்றூர் உயிர் ஒழுக்க, கண்ணீர் கவுள்அலைப்ப,
ஊன் றேய் கணைபட் டுழலும் பிணை ஒத்தேன்;
Like a stricken deer I weep. மான் றேர் அரசர் முடி உழுத வார் கழற் கால்
தோன்றல்! என் கண் களிப்ப இன்னமும் ஏன் தோன்றிலையே?

601. நேர் அலார் போர் ஏறே! நிடதத்தார் கோமானே!
Matchless warrior! King of Nishada! My life's life! Why hast thou left me? ஆர வரை மார்பா! அளியேன் உயிர்க்குயிரே!
கார் இருள் வாய் யான் புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாரலை, ஆல், என்னும்; இதுவோ நின் தண்ணளியே!

[சாரலை = நீசேரவில்லை.]

602. நெஞ்சம் மெலிவேன், நினது தடந் தோளும்
கஞ்ச மலர் முகமுங் காணாது கண் பனிப்ப
Alas! Art thou weary of me? மஞ்சு தவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று விளை யாட் டயருதியோ?

603. ஞாலத் திருள்நடப்ப, நாட் கமலம் வாய் நெகிழ,
Wilt thou not return with the morning? வேலைத் திரை முகட்டில் வெய்யோன் எழுந்தனன், ஆல்,
மாலைக் கதிர் வடிவேல் மன்னர் பெருமானே!
காலைக் கடவ கடன் கழிக்க வாராயோ?

604. மன்னவனே! இப்பிறப்பில் கண்டு மணந்திலனேல்
If not here, in some other world shall not I see thee? இன்னம் ஒருபிறப்பில் ஆனாலும் ஏழையேன்
தன்னந் தனியே இருந்து தவம் ஆற்றியும் உன்
பொன் அகலம் உள் உருகப் புல்லா தொழிவேனோ?

605. வாவும் இள மான்காள், மயில்காள், மடப் பிடிகாள்,
Ye deer, &c., can ye not show the way my lord has gone?
கூவுங் கரிய குயில்காள், மென் புள் இனங்காள்,
ஆவி என மேவி அகமேலம் என அகன்ற
காவலன் தான் போன வழி எனக்குக் காட்டீரே?

606. என்று உருகி, இரு கண் ணீர் ஆலி உகத்,
Thus saying, like a creeper fallen, she fell and wept.
தன் நாத் தழும்பப், புலம்பித், தமியளாய்
மின்னார் இடை நுடங்கச், செல்வாள்; விறல் வேந்தன்
பொன் ஆர் அடி நோக்கிப், பூங்கொடி போல் வீழ்ந்தழுதாள்.

CII பாடம்.

RELIGIOUS SENTIMENT.

ஞான உணர்வு.

[நாடுவது இது என்பது.]

607. பொன்னை மாதனைப் பூமியை நாடிடேன்;
Renunciation of all else for God.
என்னை நாடிய என்னுயிர் நாதனே!
உன்னை நாடுவன், உன்னருட்டு வெளி
தன்னை நாடுவன், தன்னந் தனியனே!

608. தன்ன தென்றுனை சாற்றுவன எலாம்
All is thine! To thee I offer all!
நின்ன தென்றனை, நின்னிடத்தே தந்தேன்;
இன்னம் என்னை இடர் உறக் கூட்டினுற்
பின்னை உய்கிலன் பேதையன் ஆவியே.

609. செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்,
ஐய, நின்னதென் றெண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கம் ஆம்
பொய்யிலே சுழன்றேன், என்ன புன்மையே!

Not knowing thee and thy works I have gone astray.

610. இல்லை உண்டென் றெவர்பக்கம் ஆயினும்
சொல்லவோ, அறியாத தொழும்பன் யான்
செல்ல வேறொரு திக்கறியேன், எலாம்
வல்ல நீ எனை வாழ்விக்க வேண்டுமே!

I am bewildered with conflicting opinions. Give me rest.

611. கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிர் எனப்
பண்டும் இன்றும் என்பா னின் றுணர்ந்திடும்
அண்டனே! உனக்கோர் பதினாயிரந்
தெண்டன், என் பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே!

Remove all mental darkness!

612. உண்ட வர்க்கன்றி உட்பசி ஓயுமோ?
கண்ட வர்க்கன்றி காதல் அடங்குமோ?
தொண்ட ருக்கெளியன் என்று தோன்றுவான்
வண்ட மிழ்க்கிசை வாக மதிக்கவே!

Fruition only satisfies.

தமிழ்ச் செய்யுட் கலம்பகம் முற்றும்.

VOCABULARY AND CONCORDANCE.

செய்யுட் கலம்பகப் பொருளகராதி.

[The learner is advised to compare this Vocabulary with those appended to the III Grammar and to the Hand-book.]

அ

அஆ = இரக்கக்குறிப்பு, alas! 139.

அகரம் = அ என்னும் அட்சரம், the letter A. 1.

அகடு=நடு நிலைமை, the centre. 135.

அகத்து = இடத்தில், in. 14.

S. அகம், [AHAM]=உள்ளம், மனம், the mind. 190. 341. 495.
  இடம், the place. [III. Gram. 63.] 596. 601.
  வீடு, house. 545.
  உள், within. 86. 366. 596.

அகலல்=விரிதல், be extended. 182. 483. 484.
  பிரிதல், become separate from. 601. 605.

அகலம் = மார்பு, ஆகம், bosom. 604.

அகழ் | தல்=தோண்டுதல், dig down into. 298. 483.

அகற்றல், [அகலல்] = விலக்கல், put away from...... ......196. 285.
  அகல்வித்தல், பெரிதாக்கல், expand...... ....19.

அஃகல்=சுருங்கல், நுட்பமாதல், be minute..... ....182.
  "*Knowledge both minute and extensive.*"

அஃது = அது, that. 20. 272. 351.

S. அங்கம்=சரீரம், the limbs, body. 465.

அங் | கண்=விஸ்தாரமான இடம். [அம் + கண்.] spreading....... 484.

அங்கணம்=சலதாரை, a gutter. 54.

அங்காத்தல்=வாயைத்திறத்தல், open (the mouth.)..... ....22.

அங்கு = அவ்விடம், there......469.

அசா = தளர்ச்சி, faintness.....423.

அசா | வாமை = தளர்ச்சி இன்மை, unwearied effort. ....217.

அசை | தல் = தளர்தல், be moved. diverted from one's object. 422.

அசை | வு = சோர்வு, weakness. 483.

அச்சம்=பயம், fear, dread. 458. 480, 490.

அச்சாணி, [அச்சு+ஆணி.] = அஞ்சுருவாணி, a linch-pin, bolt. 197.

அஞ்சு | தல்=பயப்படல், dread. 22. 53. 186. 352. 426. 465. 466. 518. 544.

அடகு = இலை, இலைக்கறி, vegetable curry. 64.

அட | க்கம்=பொறியொடுக்கம், இச்சை அடக்கம், self-government, self-restraint. 237—248.

அட | க்குதல் = அடக்கல், restrain. 240.=மறைத்தல், conceal. 67. 73.

அட | ங்குதல்=தணிதல், abate, be satisfied. 612.
  கீழ்ப்படிதல், submit to restraint. 227. 239. 243. 335.

அடல் = பெலன், strength. 580.

அடி = பாதம், தாள். 3. 4. பாதச்சுவடு, footsteps...... ......606.

அடு | க்கல்=அணி அணியாயிருத்தல், a pile, series..... ....425.

அடு | தல், = கொல்லல், kill. 404. 405. 542. 544. 548.
  சாதல், die. 94.
  சமைத்தல், cook. 257. 335. 398.
  காய்ச்சுதல், boil. ....468.

அடு | த்தல் = மேலும் மேலுஞ் செய்தல், recur, repeat. 99. 425. 536.

அடை | தல் = சேர்தல், draw near to. 55. 126. 424. 448.

அடை | த்தல் = மூடுதல், close up, conceal. 257. [548.
அட்டில் = சமையல்வீடு, a kitchen.
அணி = ஆபரணம், ornament. 200.
அழகு. 239.
சமீபம், near. 50. 361. [200.
அணி | தல் = தரித்தல், put on. 196.
சிறப்பித்தல், adorn. 132.
அணி | கலம் = ஆபரணம், an ornament. 238. 596.
அணுகல் = அடைதல், approach. 574.
அணை = கரை, a dam...........164.
அணைத்தல் = சேர்த்துக் கட்டல், tie. 210.
அண்டன் = வானவன், தேவன், lord of the universe. 611.
அதர் = வழி, the way-side....210.
அதற்கு = அக்கல்விக்கு...... ....7.
S. அதிதி = விருந்தாளி, யாசகன், a guest, mendicant. 398.
அதுவாக = அதைப் போல. (அது + ஆக.) like it. 15.
S. அப | காரம் = கேடு, an injury.
அமலை = ஓசை, ஒலி, a sound....586.
S. அ | மரர் = தேவர் [மரணமில்லாதவர்], the immortals...... ....243.
அமர்தல் = பொருந்துதல், be fitting. 196.
விரும்பல், desire..... ....134.
S. அமிழ்து = அமுதம், ambrosia. 64. 421. 509.
அமை = மூங்கில், bambû......196.
அமைவு = நிறைவு, fitness. 25.
அமைதல் = திருத்தி ஆதல், be satisfied. 156. 172.
உண்டாதல், become. 152. 341.
பொருந்துதல், agree. 82. 277. 374.
அம் = அழகு, beauty....422. 484.
அம்மா = வியப்புச் சொல், oh! see! 176. 190.
அம்பு = கணை, an arrow......485.
அயர் | தல் = செய்தல், நடத்தல், do, walk. 142. 602.
அயர் | வு = துன்பம், sorrow......574.
அரங்கு = வட்டாடும்பலகை, a draught board...............30.
அரசு = அரசன், ஆளுகை, king, government. 515. 526. 568. 576.
அரண் = காப்பு, defence. 458.
அரம்பை = வாழைமரம், a plantain tree. 249.
அரவம் = ஓசை, sound.. ......586.
அரவு = பாம்பு, serpent. ......473.
அரற்றல் = பிதற்றல், babble....166.
அரி = அரிந்த, cut. (வி. 153.) 590.
அரி | தல் = அறுத்தல், cut.......596.
அரிது = அரிதாயிருக்கின்றது, இல்லை, it is hard, rare..... ......5. 183.
அரி | த்தல் = தேடுதல், sift out......21.
அரிப்பு = sifting.... ....21.
அரிமா = சிங்கம், lion.....212. 485.
அரிய = அரிதானவை, things difficult. 83. [70. 71.
அரியார் = கூடாதவர், who cannot.
அருகு = பக்கம், vicinity....77. 361.
அருப்பு = கிளைத்தல், bloom.....433.
அரும்புதல் = உண்டாதல், மலர்தல். 575. FLOWER.
அருமை = rarity, difficulty, excellence. 71. 130. 139. 217.
அருவி = ஆறு, மலையில் வீழும் அருவி. 75. 111. 239. 292.
அருள் = கிருபை, kindness. 37. 177.
தயை. 145. 497.—502. 574. 576.
அரோ = அசை நிலை, an expletive. 81.
அலகு = அளவு, measure... 29. 158.
நெல், rice-corn.... ......572.
அலரி = ஒருமலர், a flower.....420.
அலர் | தல் = மலர்தல், விரிதல். (வி. 153.) BLOOM.... ....197.
அலறல் = அழுதல், புலம்பல், lament.............145. 161. 162.
அலை | தல் = திரிதல், wander....576.
அலை | த்தல் = ஒதுக்கல், cast up. 70. 422. கெடுத்தல், destroy....516.
ஒழுகல், trickle down.......600.
அல்ல = அல்லாதவையாம், are not. 13. 14.
அல் | லல் = துன்பம், பகை, 431. affliction. 93. 449. 500. 525.
அல் = பிற, other.... ....51.
அல்லவை = பாவம்...... 410. 561.
அல்லால் = அல்லாமல், except. 5. 17. 29. 32. 157.
அல்லார் = தீயோர், bad. 67.
அல்கல் = சிறுகல், become small. 126.

S. அவதரித்தல்=பிறத்தல், be incarnate. 577.

அ | வலம் = வல்லப மின்மை, weakness........................595.

அவா = ஆசை, inordinate desire. 184. 188. 235. 490.

அவா | வல் = விரும்பல், desire. 264.

அவி | தல்=அடங்கல், contract. 280.

அவிழ் | தல் = உடைதல், ஒழுகுதல், distil............................229.

அவை = அவையம், சபை, the assembly.................147, 512.

அவைகள், those.............14.

அவ்வது = அப்படி, so. 350. [அ + அது.]

அவ்வியம் = பொறாமை, envy. 394.

அழல் = உஷ்ணம், heat......424.

அழற்கதிர்=சூரியன், the hot-beamed [sun.] 557.

அழகு=அலங்காரம், beauty, adornment.

அழி=மிகுதி, great (gnawing.) 272.

அழி | தல்= } வருந்துதல்.
அழி | த்தல்= }

கெடுதல், கெடுத்தல், perish, destroy. 80. 190. 476.

அழுக்காறு = பொறாமை, envy. 235. 318. 391—396.

அழு | ங்குதல்=துன்பப்படல், be afflicted.......................51.

கெடுதல், perish......323. 332.

அழை | த்தல்=கூப்பிடல், call. 564.

அள|த்தல்=அளவிடுதல்,measure.91.

அள | வு = எல்லை, limit........439.

சாதனம், instrument........535.

வரையறைஞானம், 374. 441. 443. 505.

அளவளாவுதல் = நெஞ்சுகலத்தல், amalgamate................ 434.

அளாவுதல் = கலத்தல், கலக்குதல். 82. 434. 509. [65.

அளி|தல்=வருந்தல், suffer disgrace.

அளி=கிருபை, kindness. 463. 582.

எளிமை, poverty............601.

அளி|த்தல்=இரட்சித்தல், save. 575. 577.

கொடுத்தல்............583. 602.

அற = மிக, much..............208.

நீங்கும்படியாக, so as to exclude. 7. 11. 138.

முழுவதும், entirely. 228. 229.

அறம் = தருமம், virtue, charity. 37. 53. 140. 230. 231. &c. 144. 162. 172. 311.

துறவறம். 326. 327. 329. 486. 561.

தர்மகடவுள்,the god of virtue.494.

அறன்= அறம். 180. 186. 234.

அறனல்ல = அறமல்லாதவை, தீமைகள்........................180.

அறி|தல்=அறிவு, knowledge. 53. 144.
= மனதால் கிரகித்தல், comprehend........................14.

தெரிதல், understand. 20. 108. 258. 293. 351. 476.

அறி | ஞர் = அறிவை உடையவர், the wise.............. 110. 200. 275.

அறி|வு=ஞானம், knowledge. 11. 19. 28. 29. 108. 138. 143. 182. 221. 222. 346–360.

அறி | வன் = அறிவையுடையவன். 2. 352.

அறு=ஆறு, six. 134.

அறு | தல்=நீங்கல், depart, be removed, cease. 48. 171. 166. 185. 188. 228. 258. 433. 335.

உபத்திரவப்படுதல், suffer adversity...........................97.

அறு| த்தல்=நீக்குதல், cut (the bonds of.) 18. [239.

அறை|தல் = ஒலித்தல், resound. 74.

சொல்லல், declare.........275.

அடித்தல், strike. 291. 390. 567.

அற்ற = (தண்ணீர்) குறைந்த, the dry.........................48.

இல்லாத, without...........45.

அற்று = போல, so, like, as, 26. 27. 30. 147. 185. 444.

அற்றார்=வறியவர், the poor.....272.

இல்லாதவர்கள், those without. 22.

S. அற்புதம்=ஆச்சரியம், a miracle.476.

அனிச்சம் = ஓர்மலர், the anicham flower.........................401.

அனை=ஒப்பு, likeness. [வி. 93.] 32. 35. 36. 60. 81. 221.

அளவு=so much, as much as. 10. 11. 111. 215. 234.
அனைத்தெவையும் = all. 225. (அனைத்து + எவை + உம்.)
S. அனுபவித்தல்=நுகர்தல், enjoy. 174.
அன்பு=பிரியம், சிநேகம், ஆசை, affection. 37. 177. 491—496. 575. 577.
S. அன்னம் = [HANSA,] அன்னப்பட்சி. a swan...... ......16. 585. 592.
அன்னான், அன்னோன், அன்னது, அன்ன, அன்னார். } = போல, like, that kind of, such. 27. 79. 365. 534. [III Gram. 93.]
அவ்வகையான. 210. 576. 166.
அன்றி = அல்லாமல், besides. 536.
அன்று=அல்ல, it is not....59. 134.
அன்றைக்கு, that day. 312.
அன்றே = அல்லவோ. 69. 325.
அன்மை=அல்லாமை. [அல் + மை.] the not being......... ......73.

ஆ

ஆ=பசு, a cow......334. 336. 515.
ஆக, as, while. 18. 43. 111. 225. 226.
இரக்கக்குறிப்பு, ah! ....578.
ஆக = போல, as, like......15. 26.
இருக்கவே, while it is. 227.
ஆகம் = மார்பு, breast. 598.
ஆகாரம் = இரை, food.... ....108.
ஆகாத=முடியாத, impossible. 460.
ஆகு|தல்=உண்டாதல், spring from. 2. 234. 599.
முடிதல், be accomplished. 225. 535. 536.
செழித்தல், prosper. 56. [234.
ஆகுலம் = ஆரவாரம், mere sound.
ஆக்கம் = பெருக்கம், increase. 231. 327.
பயன், gain. 183. 232. [318.
செல்வம், wealth. 176. 258. 311.
ஆக்கு|தல் = செய்தல், do, cause, make........ ....109. 598.
ஆங்கு=அப்பொழுது, then. 87. 178. 209.

அசைச்சொல், redundant. 21. 563.
அவ்விடம், there. 22. 108. 337.
போல, as. 28. 37. 39. 56. 159. 374. 420. 458.
ஆசாரம் = ஒழுக்கம், prescribed observance....... ....490.
ஆடு|தல், ஆடல் } அசைதல், move, wave, vibrate.........210.
சிறகுகளை விரித்தாடுதல், strut. 15.
கூடுதல், join with.... ......82.
முழுகுதல், bathe in. 305. 412.
சஞ்சரித்தல், dwell.... ....333.
விளையாடுதல், play.... ....30.
ஆட்|சி=உரிமை, characteristic. 62.
ஆண்டை=மறுமை, the other world. 257.
ஆண்|மை=முயற்சி, effort....420.
ஆண்மைத்திறம், manliness. 422.
ஆளுந்தன்மை, predominant quality.... ....441.
ஆதரவு = பிரியம், தேற்றரவு, support. comfort....... ....230.
ஆதல் = உண்டாகுதல், become. 472.
S. ஆதி = முதல், முதன்மையான, the first.........................1.
S. ஆதிபகவன் = கடவுள், the eternal God............. ....1.
ஆமை = கூர்மம், a tortoise. 588.
ஆம் = அசை நிலை, redundant. 154.
ஆகும், will become. 12.
ஆம்பல்=அல்லி, a water lily. 48. 78.
ஆய=ஆகிய, which springs from. 2. 39.
ஆயம் = சூதாடுந் தாயம், dice. 448.
ஆயுள்=சீவன், வயசு, age, life. 207.
ஆயினும் = ஆனாலும், although (it) be.......... ....20. 24.
ஆய் = ஆகி, being. 19.
ஆய்|தல் = ஆராய்தல், examine. 90. 277. 285. 388. 596.
ஆய்|வு=ஆராய்ச்சி, examination. 173.
ஆரம் = மாலை, garland, string of pearls....... ....601.
ஆர|ாய்|தல்=சோதித்தல், examine. 25. [600.
ஆர்=அரிய, precious. [வி. 121.] 80.
நிறைந்த, intense...... ....243.

ஆர் | தல்=நிறைதல், கூடுதல், be filled with. 64. 142. 196. 383. 584.
புசித்தல், திருத்தியாதல் .... 421.
பொருந்தல், be connected with. 606.
ஆர் | த்தல்=சத்தித்தல், hum. 69. 293.
ஆர்வலர் = அன்புடையவர், the beloved ones.... ....491.
ஆலி = நீர்க்கட்டி, a drop......606.
ஆலை = கருப்பஞ்சாறு, sugarcane juice................. ......586.
கரும்பாட்டுகிறயந்தரம், the sugar mill............ ....590.
ஆல் (அசைநிலை, redundant, perhaps)=since............. 12. 18.
ஆவது = வரக்கடவது, what will, or ought to be...........293. 351.
ஆவி=பிராணன், soul. 174. 605. 608.
ஆழ் | தல்=முழுகல், be plunged into. 581.
ஆழமாதல், be sunken.......309.
ஆள் = மனிதன், man, person. 145.
ஆளர் = ஆள்வார், உடையவர், those who exercise, possessors of. 108. 138. 499.
ஆளு | தல்=முயலல், செய்தல், exercise..... ....499. 500. 580.
ஆள் | வினை=முயற்சி, effort....222.
ஆறு = நதி, river. 26. 175. 475. 586.
வழி, way, course. 12. 159. 173. 254. 296. 377. 476.
விதம், manner.... 169. 252. 563.
ஆறு | தல்=தணிதல், heal, be assuaged. 248. 574.
ஆற்ற = மிகுந்த, much. 283. 509.
ஆற்று | தல், ஆற்றல், } செய்தல், do, perform. 130. 158. 165. 261. 371. 482. 512. 570. 604.
மிகுதி, be much. 138.
வல்லமை, power. 52. 271. 281. 310. 535. [294. 484. 525.
பொறுத்தல், endure. 261. 271.
பெருமை, greatness........ 441.
காப்பாற்றல், guard.... ....472.
ஆற்றறுத்தல் = வழியில் செல்லுதல், proceed towards. 93.
ஆற்றுதார்=தரித்திரர், the poor. 255.
ஆற்றுமை = வலியில்லாமை, weakness................ ......281.
பொறுத்தற்கரியவை.
ஆன்=பசு, a cow. [வி. 65.]....81.
ஆனும்=ஆனாலும், whatever. 12. 50.

இ

இக | த்தல்=கடத்தல், exceed, *transgress the bounds of*. 137. 528. 590.
இகல் = பகை, hatred.... ....537.
இகழ் | தல் = பழித்தல், despise. 26. 37. 57. 65. 177. 297.
நீங்கல், கடத்தல், surpass. 578.
இசை = வாசகத்தமிழ், prose.
இசை | தல்=பொருந்தல், fit, agree. 422. 475.
கூடுதல், succeed.... ......485.
கிடைத்தல், be obtained....332.
ஏறுதல், obtain entrance....355.
இடத்து = பொழுது, when. 502.
இடம் = தலம், place. 19. 20.
இடம்|படல்=விரிதல், be extensive. 335.
இடல் = கொடுத்தல், give. (Redundant.) 21. 63. 175.
இடர்=துன்பம், affliction. 126. 333. 470. 560. 608. [589.
இடறு|தல்=தடுத்தல், strike against.
இடி | த்தல் = புத்திசொல்லல், reprove. 85.
அடித்தல், strike.... ....517.
இடு | காடு = சுடுகாடு, the burning ground...................253.
இடு | தல் = கொடுத்தல், give. 474.
போடுதல், dash against....108.
இடு | தலை = கபாலம், skull. 309.
இடு | க்கண்=துன்பம், straits, affliction..... ....87.
இடும்பை = துன்பம், affliction. 4. 155. 221. 319. 595.
இடை = நடு, middle. 63. 171. 168. 188. [152. 588.
